விலை ரூபா 1-00

# ஈழநாடு
THE EELANADU

மலர் 24 மார்கழி 5 ரபி-அவ் 4 இதழ் 310
யாழ்ப்பாணம் திங்கட்கிழமை 20—12—82

லிவப்பூல் அக்கடமி
நெல்லியடி
1983 A/L Repeat Classes
Pure / Applied – ரவிமோகன்
தாவரவியல் – சிவவீரசிங்கம்
விலங்கியல் – நாகநாதன், தம்பிராசா
பௌதிகம் – ஸ்ரீ, தவபாலன்,
இரசாயனம் – ஜெகன், வரதன், சிவகுமார் ஜெயராஜ், காந்தராஜ்
ஆரம்பம்: 23-12-82
5523

## ஜே. ஆர். இன்று மட்டக்களப்பில்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு வெள்ளநிவாரணப் பணிகளைப் பார்வையிடுவதற்காக ஜனாதிபதி திரு. ஜே ஆர் ஜெயவர்த்தனா இன்று மட்டக்களப்புக்கு விஜயம் செய்கிறார்.

இவருடன் பிரதமர் திரு. ஆர். பிரேமதாசா, சமூக சேவைகள் அமைச்சர் திரு. அசோகா கருணாரத்ன, சுகாதார அமைச்சர் டாக்டர் ரஞ்சித் அத்தபத்து ஆகியோரும் வரவுள்ளனர்.

வெள்ளநிவாரணப் பணிகள் குறித்து இன்று மட்டக்களப்பு கச்சேரியில் நடைபெறவுள்ள

[8-ம் பக்கம் பார்க்க]

# அவசரகாலநிலை காலாவதி!

## மக்கள் தீர்ப்பின் பின் மீண்டும் அமுல்?

(நமது சிறப்பு நிருபர்)

அவசரகால நிலைச் சட்டம் நேற்று நள்ளிரவுடன் காலாவதியானது.

இச்செய்தி அச்சுக்குப் போகும் வரை, அவசரகால நிலையை நீடிப்பதற்கான உத்தரவு வழங்கப்படாத போதிலும் அவசியம் ஏற்படும் பட்சத்தில் இச்சட்டம் மீண்டும் அமுல் செய்யப்படலாம் எனத் தெரியவருகிறது.

அவசரகால நிலை நேற்று நள்ளிரவுடன் காலாவதியானபோதிலும், இச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டவர்கள் உடனடியாக விடுதலை செய்யப்படமாட்டார்கள் என்றும், மக்கள் தீர்ப்புக்குப் பின்னர் அவசரகால நிலை மீண்டும் அமுலுக்குக் கொண்டுவரப்படலாம் என்றும் ''ஈழநாடு'' அறிகிறது.

## கிளிநொச்சி கூட்டணிக் கூட்டம்: பொதுச்சபை உறுப்பினர் சிலர் வெளிநடப்பு!

(கிளிநொச்சி நிருபர் கே. வி. கே. திருலோகமூர்த்தி)

கிளிநொச்சித் தொகுதி தமிழர் விடுதலைக் கூட்டணி பொதுச்சபைக்கூட்டம் நேற்று நடைபெற்றபோது பொதுச் சபை உறுப்பினர்கள் சிலர் வெளிநடப்புச்செய்தனர்.

கிளிநொச்சி எம். பி. திரு. வி. ஆனந்தசங்கரி தலைமையில் இக்கூட்டம் நடைபெற்றது. திரு. ஆனந்தசங்கரி தமது உரையில் தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைமைப்பீடம் எடுத்த முடிவின்படி இத்தேர்

(8-ம் பக்கம் பார்க்க)

## சைவமத பீடங்கள் ஆதரவில் உண்ணாவிரதம்
### ஆயிரம்பேர் கலந்துகொண்டனர்

(மாவிட்டபுரம்)

பயங்கரவாத தடைச் சட்டத்தை நீக்குமாறும், கைது செய்து தடுப்புக்காவலில்வைக்கப்பட்டுள்ள மதகுருமார், விரிவுரையாளர், இளைஞர்கள் போன்றோரை விடுதலைசெய்யுமாறு கோரியும் சைவமதபீடங்களின் ஆதரவில் மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவில்கிழக்கு வாயில் முன்றலில் மாபெரும் உண்ணாவிரதம் நேற்று நடைபெற்றது.

சைவ மதகுருமார், அந்தணசிறார்கள், கூட்டணி இளைஞர் பேரவை, மகளிர்பேரவை பிரதிநிதிகள், பொதுமக்கள், நீதிக்கும் சமத்துவத்திற்குமான இயக்கத்தினர், மாவிட்டபுரம், காங்கேசன்துறை கூட்டணிக் கிளையினர் மகளிர் உட்டசுமார் ஆயிரம் பேர்வரையில் இந்த உண்ணாவிரதத்தில் கலந்துகொண்டனர்.

## சுவீப் முடிவுகள்

(கொழும்பு)

தேசிய லொத்தர்சபையின் தலைமையகத்தில் நேற்று முன்தினம் இழுக்கப்பட்ட 913-வது இலக்க சுவீப் முடிவுகள் வருமாறு:

1-ம் பரிசு
14 O 0826
ரூபா 2 00,000-00

2-ம் பரிசு
01 H 0007
ரூபா 75,000-00

3-ம் பரிசு
07 E 0890
ரூபா 25,000-00

(5-ம் பக்கம் பார்க்க)

## இறம்பைக்குளம் சம்பவம்: விசாரணை நடத்துமாறு ஜனாதிபதிக்கு மன்னார் ஆயர் தந்தி

[வவுனியா நிருபர் ரி விவேகராசா]

வவுனியா இறம்பைக்குளம் புனித அந்தோனியார் தேவாலயத்தில் இடம்பெற்ற சம்பவம் குறித்து விசாரணை நடத்துமாறு கோரி, மன்னார் மறைமாவட்ட ஆயர், ஜனாதிபதியை தந்தி மூலம் கேட்டுள்ளார்.

ஜனாதிபதி ஜே ஆர். ஜெயவர்த்தனவுக்கு மன்னார் மறைமாவட்ட ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் அனுப்பிவைத்துள்ள தந்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

''பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்டு இராணுவ முகாமில் காவலில் வைக்கப்பட்டிருக்கும் மதகுருமாரை விடுதலை செய்யுமாறு கோரி வவுனியா மக்கள் ஒன்றுகூடி இறம்பைக்குளம் புனித அந்தோனியார் தேவாலயத்தில் பிரார்த்தனையில் ஈடுபட்டுக்கொண்டிருந்த போது எவ்வித முன் அனுமதியுமின்றி பொலிஸார் ஆலய வளவுக்குள் நுழைந்து கண்ணீர்ப் புகை, குண்டாந்தடிப் பிரயோகம் மேற்கொண்டு பெண்

(8-ம் பக்கம் பார்க்க)

I. C. M. A. MAY 1983
I. A. A. JUNE 1983
I.C.A. (Prelim) NOVEMBER 1983
I. D. P. M. JUNE 1983
COMPUTER PROGRAMMING

வகுப்புகள் இப்பொழுதுதான் ஆரம்பமாகியுள்ளன.
G. C. E. A/L முடிவுக்காகக் காத்திருந்தவர்களும் சேர்ந்து படிக்கலாம்.
புதிதாகச் சேர்பவர்களுக்கு இதுவரை முடிந்த பாடங்கள் திருப்பிக் கற்பிக்கப்படும்.

விபரங்களுக்கு:
கன்ரேபியா கல்வி நிறுவனம்
(Shoot of oxonia Institute, Colombo)
21, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 24201
(5559)

## ரூ.2லட்சம் கடத்தல் முறியடிப்பு: வான் பறிமுதல்!

(யாழ்ப்பாணம்)

இரண்டு லட்சம் ரூபா பெறுமதியான கடத்தல் பொருட்களை வானொன்றில் ஏற்றிக்கொண்டிருந்த போது பொலிசார் மடக்கிப் பிடித்துள்ளனர்.

யாழ்ப்பாணம் இ வன் கோவில் வீதியில் இக்கடத்தல் சம்பவம் நடைபெற்றது. கடத்தல் சம்பவம் நடைபெற்ற இடத்துக்கு யாழ்.

பொலிசார் விரைந்தபோது களஞ்சிய அறையிலிருந்து இரண்டு லட்சம் ரூபா பெறுமதியான வானொலிப்பெட்டிகள், கார்ச்சட்டைகள் வகைகள் வானொன்றில் ஏற்றிக்கொண்டிருந்தனராம். பொருட்களையும், வானையும் கைப்பற்றி பொலிசார் சாரதியையும் கைது செய்து யாழ் மாவட்ட சுங்க இலாகா

[8-ம் பக்கம் பார்க்க]

## முன்னாள் செனட்டர் மாணிக்கம் காலமானார்

(இரா. உதயகுமார்)

முன்னாள் செனட்டர் திரு. மு மாணிக்கம் 82-வது வயதில் மட்டக்களப்பிலுள்ள தமது இல்லத்தில் நேற்றுப் பகல் காலமானார்.

தமிழரசுக்கட்சியின் ஆரம்பகால முக்கிய உறுப்பினராகவிருந்து மட்டக்களப்புத் தொகுதி அமைப்பாளராகப் பணியாற்றி 1972ல் தமிழர் விடுதலைக்கூட்டணியை உருவாக்குவதிலும் அரும்பாடுபட்டவர்.

தமிழரசுக்கட்சியினால் முன்னெடுத்துச் செல்லப்பட்ட 'சிறீ' எதிர்ப்புப் போராட்டம், சத்தியாக்கிரகம் ஆகியவற்றில் ஈடுபட்டு வீட்டுக் காவலிலும், பனாகொடை

(8-ம் பக்கம் பார்க்க)

# வரிவிளம்பரம்

## விற்பனைக்கு

Ford Capri 1600 G.T 6 Sri 7496 கார் விற்பனைக்குண்டு விபரங்கட்கு: வ சற்குணசிங்கம், கோப்பாய் வடக்கு, கோப்பாய். 5529

யாழ். மருத்துவக்கல்லூரிக்கு அண்மையில் 2½ பரப்பு வீடு கட்ட உகந்த காணி கிணற்றுடன் விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு: 51/1, கண்டி வீதி, யாழ்ப்பாணம். 5444

புரொயிலர் கோழி கிலோ ரூபா 41/-, புரொயிலர் கோழி இறைச்சி கிலோ ரூபா 30/- விலையில் விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ளவும். ராஜா தியேட்டர், யாழ்ப்பாணம். 5545

முழு அளவிலான பிரபல்யமான புத்தம் புதிய அச்சகம் ஒன்று முழுமையாக விற்பனைக்குண்டு நீண்ட குத்தகைக்கும் கொடுக்கப்படும். தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: வஸ்தியன் அச்சகம், யாழ்ப்பாணம். 5549

'இலகுவான ஆங்கிலம்' தமிழ்மொழி மூலம் ஆங்கிலம் இலகுவிற்கற்றுக்கொள்வதற்கு மிகவும் துணைபுரிகிறது இந்நூல் வெளிநாட்டு அறிஞர்களால் ஆங்கிலம் கற்பிக்கும் முறைகளை ஆராய்ந்து பரீட்சித்துக்கண்ட முடிவுகளுக்கிணங்க, பாலர்கள் தொடக்கம் பெரியோர்கள் வரையில் துரிதமாக ஆங்கிலத்தைச் சரியாக உச்சரிக்க, பேச, எழுத பழகக்கூடியவகையில் பேராசிரியர் ஒருவரால் தயாரிக்கப்பெற்றபாடவரிசைகளைக் கொண்டது. 12 வார இதழ்களை கொண்ட தொகுதி ஒன்றின் விலை ரூபா 24 00 கிடைக்குமிடம்: சுன்னாகம்தனலக்குமி புத்தகசாலை. 5527

29 ஆசனங்களுடைய 6Cylinder isuzu Mini Bus உடனடியாக விற்பனைக்குண்டு. அல்லது வாகனங்களுடன் மாற்றிக்கொள்வது விரும்பத்தக்கது. விபரங்களுக்கு, கல்யாணி கிறீக்கவுஸ் 73, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். Phone: 24077 or 24428

5557

வட மாகாண தெ. ப. பொ. உ. வி. கூ. சங்கங்களின் சமாசம் (ம. ப.)

330, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

### பதவி வெற்றிடங்கள்

1. பொதுமுகாமையாளர்.
2. கல்வி உத்தியோகத்தர்.

மேற்படி பதவிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. விண்ணப்பிக்க விரும்புவோர் மேற்படி விலாசத்திற்கு விண்ணப்பித்து, விண்ணப்பப் படிவத்தினையும், விபரங்களையும் பெற்றுக்கொள்ளலாம் "கற்பகம்" மாத இதழிலும் விபரங்கள் வெளியிடப்பட்டுள்ளது.

விண்ணப்ப முடிவுத்திகதி 10-1-1983.

(ஒப்பம்)
க. நடராசா,
நிர்வாகச்செயலாளர்.
5554

## விற்பனைக்கு

1 வருடம் பாவித்த புதிய 6 கன அடி. SINGER குளிர்சாதன பெட்டி விற்பனைக்கு. தொடர்பு: நாவலர் வீதி, 466/4 மூத்ததம்பி அவனியூ, யாழ்ப்பாணம். 5558

## தேவை

லேத் இயக்குனர், வெல்டர்கள், பிற்றர்கள், ரிங்கர்கள் தேவை. பிற்பகல் 2 மணிக்கும் 4 மணிக்கும் இடையில் நேரில் வரவும். சு. பாலேந்திரா, நெடுங்குளம் சந்தி, 586, கண்டி றோட், அரியாலை, யாழ்ப்பாணம். 5517

## சேவை

கர்நாடக இசைக்கச்சேரிகள்: எம். எஸ். சுப்புலட்சுமி, மதுரைசோமு, சீர்காழி, எம். எல் வஸந்த குமாரி, டி. கே. பட்டம்மாள், டி. கே. ஜெயராமன் ஜேசுதாஸ, குன்னக்குடி, லால்குடி, எம். எஸ். கோபாலகிருஷ்ணன், டி. என். கிருஷ்ணன் வயலின் எஸ். பாலச்சந்தர், காயத்திரி வீணை-மற்றும் பல தர்க்காஸ் 68, கே. கே. எஸ். வீதி, சுன்னாகம். 5552

கிறீஸ்தவப் பாடல்கள் - ஜேசுதாஸ், சசிரேகா, ஈஸ்வரி, நடராஜா முதலியார், ராதா மாணிக்கம் பாடியவை கிறிஸ்மஸ் பாடல்கள் - Boney M, Nat King Cole, பாடியவை "தர்க்காஸ்" 68, கே. கே. எஸ். வீதி, சுன்னாகம்.

5553

### முக்கிய அறிவித்தல்

யாழ்ப்பாண மாநகராட்சிமன்றம் சோலைவரி 4ம்கந்தாயம் 1982

1982ம் ஆண்டு 4ம்கந்தாயத்திற்கான சோலைவரிப்பணம் 31-12-82ம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 3-00 மணிக்கு முன்பதாக மாநகராட்சி மன்றப் பணியகத்தில் செலுத்தப்படுதல் வேண்டும். இத்திகதிக்கு பின்னர் செலுத்தப்படும் வரிப்பணத்திற்கு மேலதிகமாக கீழ்வரும் விபரங்களின்படி வெலியாத்துப்பணம் அறவிடப்படும்.

வெற்றுக்காணிகள், குடியிருப்புக்காணிகள்
— 15 % வீதம்.

இவையல்லாத காணிகள்
— 20 % வீதம்.

காசோலைகள், காசுக்கட்டளைகள், அஞ்சற் கட்டளைகள் "யாழ்ப்பாண மாநகர ஆணையாளரின்" சார்பில் அஞ்சல் சேவையில் ஏற்படும் காலதாமதத்தைத் தவிர்க்கும்பொருட்டு முன்கூட்டியே அனுப்பப்படல் வேண்டும். அப்படியாக அனுப்பப்படும்பொழுது, வரியிறுப்பாளர்கள் ஆதனத்தின் தற்போதைய வரி மதிப்பு இலக்கம், வீதியின் பெயர் வட்டார இலக்கம் முதலிய விபரங்களுடன் வரிப்பணத்தை அனுப்பும்படி வேண்டப்படுகின்றனர்.

சி. வி. கே. சிவஞானம்,
மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.
மாநகராட்சிமன்ற அலுவலகம்,
யாழ்ப்பாணம்,
17-12-82. 5530

### பின்னுறுதிக்கட்டளை பற்றிய அறிவித்தல்

மாவட்ட நீதிமன்றம்
மல்லாகம்

மரணசாதனமின்றிக் காலஞ்சென்ற இளவாலை செல்லப்பா குமாரசுவாமி பெண் இரத்தினம்மா வென மறுநாமங்கொண்ட அன்னம்மா விட்டுச் சென்ற சொத்துக்கள் சம்பந்தமாக.

-மரணமெய்தியவர்
வேலுப்பிள்ளை செல்லத்துரை, புன்னாலைக்கட்டுவன் தெற்கு, புன்னாலைக் கட்டுவன்,
-மனுதார்

மரணசாதன )
நியாயாதிக்கம் ) 145/T
எதிராக

1. செல்லப்பா குமாரசுவாமி, பத்தாவத்தை இளவாலை மேற்கு, இளவாலை.
2. வேலுப்பிள்ளை தம்பு, புன்னாலைக் கட்டுவன் தெற்கு, புன்னாலைக் கட்டுவன். தற்சமயம் இல. 11, ஐம்பத்தைந்தாம் ஒழுங்கை, வெள்ளவத்தை, கொழும்பு-6.

-பிரதிவாதிகள்

மேலே குறிப்பிடப்பட்டிருக்கும் இலக்கங்கொண்ட மரணசாதன வழக்கு மேலே குறிப்பிடப்பட்ட மரணமெய்தியவரின் மரணச் சொத்துக்களையும், உடமைப் பொருட்களையும் நிர்வகிப்பதற்கு, மேலே குறிப்பிடப்பட்டிருக்கும் மனுதார் நிர்வாகப்பத்திரம் தனக்கு வழங்குமாறு இந்நீதிமன்றத்தில் இவ்வழக்கைத் தொடுத்தமையினால் இந்நீதிமன்றம் அவரின்கோரிக்கைக்கு இணங்கிப் பின்னுறுதிக்கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

இது சம்பந்தமாக அக்கறையுள்ள ஆள் எவரும் 1983ம் ஆண்டு மாசி மாதம் 2ந் திகதி முற்பகல் 9 மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி இவ்வழக்கிற்பதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளையை ஏன் முற்றுனதாக்கப்படலாகாது என்பதற்குத் தக்க காரணமிருப்பின் அதனை இந் நீதிமன்றத்திற்குக் காட்டுமாறு இத்தால்தேவைப்படுத்தப்படுகின்றார்.

1982ம் ஆண்டு மார்கழி மாதம் 16ந் திகதி.

நீதிமன்றக்கட்டளைப்படி,
சு. வ. கணேசன்,
பதிவாளர்,
மாவட்ட நீதிமன்றம்,
மல்லாகம்.

தயாரித்தவர்:
வ. முத்துக்குமாரசுவாமி,
மனுதாரின் சட்டத்தரணி.
5546

### மன்னார் மாவட்ட அபிவிருத்திச் சபை வழங்குனர்களுக்கான கூறுவிலை விண்ணப்பம் - 1983

மேற்கூறிய விடயமாக கூறுவிலைப் பத்திரங்கள் வழங்கப்படும் கடைசித்திகதி 21-12-82 வரை நீடிக்கப்பட்டுள்ளது.

ச. மகேந்திரன்
கணக்காளர்,
மாவட்ட அபிவிருத்திச் சபை, மன்னார்.
5555

### புதிய கட்டடம்

[புலோலி]

பருத்தித்துறை சித்திவிநாயகர் வித்தியாலய மாணவர்களின் நன்மைகருதி 1,25,000 ரூபா செலவில் மாடிக்கட்டிடமொன்று அமைக்கப்பட்டு வருகின்றது. இக் கட்டடத்தை துரித கதியில் அமைந்து முடிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டுள்ளதாக பாடசாலை அபிவிருத்திச் சங்கச் செயலாளர் திரு. என். சிவசுப்பிரமணியம் தெரிவித்தார்.

### விடுமுறை அறிவித்தல்

எமது காரியாலயம் நத்தார் பண்டிகையை முன்னிட்டு இம்மாதம் 22-ம் திகதி தொடக்கம் 26-ம் திகதி வரை மூடப்பட்டிருக்கும்.

TFC தபினன்ஸ் கொம்பனி-லிமிட்

DIPLOMA IN COMPUTER ENGINEERING
London Qualification
(City and Guilds Computer-I. D. P. M.)

ஆரம்பம்: 22-12-82

விரிவுரையாளர்கள்:- அனுபவமிக்க பட்டயப் பொறியியலாளர்கள்.

விபரங்கட்கு:- கெயின்ஸ் கல்வி நிலையம்
KEYNES INSTITUTE
(5556) நெல்லியடி, கரவெட்டி.

தவணைமுறையில் தொலைக்காட்சிப் பெட்டிகளைக் கொள்வனவு செய்து அதே நாளில் உங்கள் வீட்டில் பொருத்திக்கொள்ள

**வீனஸ் றெக்கோடிங்**
றேடியோ வாச் வேக்ஸ்

சென்னை ரூபவாகினி நிகழ்ச்சிகளைத் தெளிவாகக் கண்டுகளிக்க உத்தரவாதத்துடன்

**'ஏரியல்' (அன்ரனா)**

பொருத்திக் கொள்ளவும்.

★ சொனி (Sony)
★ நஷனல் (National)
★ சன்யோ (Sanyo)
★ சிரு (Siera)

மற்றும் இன்னோரன்ன வர்ண-கறுப்பு/வெள்ளை தொலைக்காட்சிப் பெட்டிகளை சகாய விலைக்கு தவணைமுறையில் (F) பினன்ஸ் வசதியுடன் பெற்றுக் கொள்ளவும்.

**வீனஸ் றெக்கோடிங்**
றேடியோ வாச் வேக்ஸ்
266/1, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

## X' MAS GRAND SALE

**பாட்டா பாதணிகள், கிறிஸ்மஸ் பொருட்கள்**

கையிருப்பு சொற்பம். விரையுங்கள்

**எஸ். சின்னத்துரை அன் பிறதர்**

39, கே. கே. எஸ். வீதி - யாழ்ப்பாணம்

போன்: 22703 - 22183

# தென் ஆபிரிக்கா சென்ற கிரிக்கெட்குழு நாடு திரும்பியது

(கொழும்பு)

இலங்கை அரசின் விருப்பத்துக்குமாருக இனவாதக் கொள்கையுடைய தெ. ஆபிரிக்காவுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்ட முன்னுள் காப்டன் பந்துல வர்ணபுர தலைமையிலான கிரிக்கெட்குழு நேற்று முன்தினமிரவு நாடு திருப்பியது.

இக்குழுவினர் தென்ஆபிரிக்காவில் 11பந்தயங்களைவிளையாடினர். இவர்களைக்கவரும் வகையில் பெருந்தொகைப் பணத்தினையும் தெ. ஆபிரிக்க அரசு இவர்களுக்கு வழங்கியிருந்தது.

இக்குழுவினருக்கு வெளிநாட்டுச் சுற்றுப்பயணங்களை நிறைவு செய்து திரும்பும் கிரிக்கெட் அணிக்கு வழங்கும் வரவேற்பு வழங்கப்படாதபோதிலும் நெருங்கிய உறவினர்களும், நண்பர்களும் விமான நிலையத்திற்கு வந்திருந்து இவர்களை வரவேற்றனர்.

விமான நிலையத்திலிருந்த பத்திரிகைப் படப்பிடிப்பாளர்கள் சிலர் இவர்களது வருகையைப் படம்பிடிக்க முற்பட்டபோது இவர்களின் ஆதரவாளர்களால்மிரட்டப்பட்டனராம். ஆயினும் விமானநிலைய பாதுகாப்பு அதிகாரிகளின் துணையுடன் தமது கடமையை செய்ததாக படப்பிடிப்பாளர்கள் தெரிவித்தனர். (கி)

## பரிசுகள் வழங்க அஞ்சும் கிறிஸ்மஸ் தாத்தா!

லண்டன், டிச. 19

'கிறிஸ்மஸ்' பண்டிகைக்கு பரிசுகளைவழங்கும் கனடாவின் ரொரன்டோ நகரைச் சேர்ந்த கிறிஸ்மஸ் தாத்தா ஒருவர் இம்முறை தமது கடமையைச் செய்ய அஞ்சி பரிசுகள்கொடுப்பதை நிறுத்தியுள்ளார்.

வர்த்தகரான இந்த கிறிஸ்மஸ் தாத்தா வீதியோரத்தில் நின்றே பாதசாரிகளுக்கு வழமையாக பரிசுகளை வழங்குவார். ஆனல் கனடாவில் எப்போதும் இல்லாதவாறு வேலையற்றோர் தொகை அதிகரித்திருப்பதால் முன்புபோல வீதியில்நின்று பரிசுகளை வழங்க முடியாதுள்ளதென்றும், ஏனெனில் வேலையற்ற கூட்டத்தவரால் தாம் சிலவேளைகளில்தாக்கப்படக்கூடுமென்றும் இறக்கவும் நேரிடலாமென்றும் அவர் கூறியுள்ளார்.

திரு. டான் றியால் என்ற 38 வயதான இந்த நத்தார் தாத்தா கடந்த வருடம் மட்டும் தமது சொந்த செலவில் 4000 டாலர்கள் பெறுமதியான பரிசுகளை வீதியில் செல்வோருக்கு கொடுத்தார் என்பது குறிப்பிடத்தக்கது. அத்துடன் காலுறை, கம்பளி உடை, கையுறை, புகையிலைத்தூள் ஆகியவற்றுடன் பெண்களுக்கு வாசனைத்திரவியங்களையும் இவர் வழங்கினுர்.

கனடாவில் 1930க்குப் பின்னர் மிகமோசமாக வேலையில்லாப்பிரச்னை நிலவுகிறது. எட்டு கனேடியர்களில் ஒருவர் வேலையின்றியுள்ளார். [கி]

## தடை உத்தரவை மீறி

# பாக். சட்டத்தரணிகள் இராணுவ ஆட்சிக்கு எதிர்ப்பு!

கராச்சி, டிச. 19

சுமார் 500 வழக்கறிஞர்கள் பாகிஸ்தான் இராணுவ ஆட்சியாளரால் விதிக்கப்பட்ட தடைஉத்தரவையும் மீறி கராச்சியிலுள்ள திறந்தவெளியரங்கொன்றில் பெரும் எதிர்ப்புக் கூட்டமொன்றைநேற்று நடத்தினுர்கள்.

இக்கூட்டத்தில் பாகிஸ்தானின் பஞ்சாப், வடமேற்கு மாநிலங்களிலிருந்தும் சட்டத்தரணிகள் பெருமளவு கலந்துகொண்டனர்.

இராணுவ ஆட்சியாளர் சட்டத்தரணிகளின் இப்பெரும் எதிர்ப்புக்கூட்டத்திற்கு தடைவிதித்திருந்தனர். ஆயினும் அவர்கள் அத்தடையைப் பொருட்படுத்தாது திட்டமிட்டவாறு இக்கூட்டத்தை நடத்தினர்.

இராணுவச் சட்டம் மீறப்பட்டபோதிலும் எவரும்கைது செய்யப்பட்டார்களா என்ற விபரம் உடனடியாக தெரிவிக்கப்படவில்லை. (கி)

# பி.பி.ஸி. வெளிநாட்டுசேவை பொன் விழா ஆண்டு!

லண்டன், டிச. 10

பி. பி. ஸி என்றழைக்கப்படும் பிரித்தானிய ஒலிபரப்புச்சேவை இன்றுதனது 50வது வருட வெளிநாட்டுச் சேவையைக்கொண்டாடுகின்றது

பி. பீ. ஸி யின் வெளிநாட்டு சேவை 1932ம் ஆண்டு டிசம்பர் 19ந் திகதிஆரம்பிக்கப்பட்டது. அன்றிலிருந்து இன்று வரை உலகில் அதிகூடிய வெளிநாட்டு நேயர்களைக் கவர்ந்த வானெலிச் சேவையாக இது விளங்குகின்றது.

இச்சேவை தற்போது பல நவீன முறைகளைக் கையாண்டு புதிய நிகழ்ச்சிகள் பலவற்றையும் வெளிநாட்டு சேவையில் வழங்குகின்றது.

பி. பி. ஸி யில் 'தமிழோசை' என்று தமிழில் ஒலிபரப்புச் சேவையொன்றும் நடத்தப்படுவது வாசகர் அறிந்ததே. இதுபோன்று பல சர்வதேச மொழிகளிலும் இதன் வெளிநாட்டுசேவைஅமைந்துள்ளது.

பி, பி. ஸி. யின் கணிப்பொன்றில் 1955ம் ஆண்டில் உலகில் 23 கோடியே 70 லட்சம் மக்களே வானெலிப்பெட்டிகளை வைத்திருந்தனரென்றும், தற்போது 130 கோடி மக்கள் வானெலிப்பெட்டிகளை வைத்துள்ளனர் என்றும்தெரிவிக்கப்பட்டுள்ளது. (கி)

## "அன்னை சாரதா வழியில் வாழ்வோம்"

(புலோலி)

"தூய அன்னை ஸ்ரீசாரதா தேவி வாழ்ந்து காட்டிய வாழ்க்கை முறைப்படி நாமும் வாழவேண்டும். எல்லோரிடத்திலும் அன்பு செலுத்தி அருள் பாலிக்கும் தாய்மையின் சின்னமாக தூய அன்னை ஸ்ரீசாரதாதேவி விளங்கினுர்"

இவ்வாறு பருத்தித்துறை ஸ்ரீ இராமகிருஷ்ணசாரதா சேவாச்சிரமத்தில் நடைபெற்ற தூய அன்னை ஸ்ரீ சாரதாதேவியின் 130 வது ஆண்டு பிறந்ததினவிழாவிலே உரையாற்றிய சுவாமி சித்ரூபானந்தாவிழாவிலே குறிப்பிட்டார். அன்னையின் பிறந்த தினத்தையொட்டி அன்றைய தினம் சேவாச்சிரமத்தில் விசேட பூஜைகளும், ஏழைகளுக்கு அன்னதானம் வழங்கலும் இடம்பெற்றன.

# தென்கிழக்கு ஆசியாவில் இந்தியா தொடர்ந்து அமைதியைப் பேணும்

-- நரசிம்மராவ்

புதுடில்லி, டிச, 15

"தென்கிழக்கு ஆசியாவில் அமைதியை பேணும் நடவடிக்கைகளில் பாரதம் தொடர்ந்தும் ஈடுபட்டுவரும்" என்று இந்திய வெளிநாட்டமைச்சர் திரு, நரசிம்மராவ் தெரிவித்தார்.

வியட்னுமின் வெளிநாட்டமைச்சர் திரு. கியூங்கோ டாட்டிற்கு விருந்துபசாரமொன்றை வழங்கிப் பேசுகையிலேயே திரு. ராவ் இதனைத் தெரிவித்தார்.

இந்தியா வியட்னுமுடன் கூட்டுக்கமிஷன் ஒன்றை நிறுவி விஞ்ஞான தொழில் நுட்ப ஆலோசனைகளையும் உதவிகளையும் அதற்குவழங்க முன்வந்துள்ளது. இக்கூட்டுக்கமிஷன் சம்பந்தமாக கைச்சாத்திடும் பொருட்டே வியட்னும் வெளிநாட்டமைச்சர் இந்தியா வந்துள்ளார்.

தென்கிழக்கு ஆசிய நாடொன்றுடன் கூட்டுக்கமிஷன் ஒன்றை இந்தியா ஏற்படுத்திக்கொள்வது இதுவே முதல் தடவையாகும்.

வியட்நாம் அமைச்சர் திரு. கியூங்கோடாட் தமது உரையில் தெரிவித்ததாவது:- "இந்திய வியட்நாம் கூட்டுக்கமிஷன் இருநாடுகளுக்குமிடையே நல்லுறவு ஒத்துழைப்பு ஆகியவற்றைஏற்படுத்திக்கொள்ள வழி செய்யும்.

"எதிர்வரும் மார்ச்மாதம் புதுடில்லியில் நடைபெறவுள்ள அணிசேரா நாடுகளின் 7வது உச்சிமாகாநாடு பாரதத்தின் அணிசேரா கொள்கையை உலக நாடுகளுக்கு எடுத்துக்காட்டுவதுடன், அதற்குகௌரவத்தையும் பெற்றுக்கொடுக்கும்" என்றுர், [கி]

உலக

# ஹாக்கி இறுதிப்போட்டி: இந்தியா-ஆஸி. மோதல்

மெல்போர்ன், டிச. 19

மெல்போர்ன் ஆஸ்திரேலியாவில் நடைபெற்றுவரும் உலக ஹாக்கி சுற்றுப்பந்தயத்தின் இறுதிப்போட்டியில் ஆஸ்திரேயாவும், இந்தியாவும் மோதவிருக்கின்றன.

இந்திய அணி அரைஇறுதி ஆட்டத்தில் 3-2 என்ற ரீதியில் நியூஸிலாந்தை தோற்கடித்தே இறுதிப்போட்டிக்குப் பிரவேசித்தது.

தற்போதைய ஹாக்கிச்சாம்பியனுக இருக்கும் நெதர்லாந்து இறுதிப் போட்டியில்பிரவேசிக்கும் வாய்ப்பை இழந்துள்ளது.

இந்திய அணி உலக ஹாக்கி ஒலிம்பிக் சாம்பியன் என்பது குறிப்பிடத்தக்கது. [கி]

# "மனித குலத்தை அணு ஆயுதங்கள் நாசம் செய்யும்!"

-- பரிசுத்த பாப்பரசர்

ரோம், டிச. 19

"அணுஆயுதங்கள் மனித குலத்தை நாசஞ்செய்யக்கூடிய பயங்கரமானவையாகும்" என்று பரிசுத்த பாப்பரசர் எச்சரித்துள்ளார்.

இத்தாலிக்குச் சொந்தமானசிசிலித்தீவில் அமெரிக்கா அதிசக்திவாய்ந்த ஏவுகணைகளைப் பொருத்திய 84 கப்பல்களை நிறுத்திவைக்கவுள்ளது. இந்தநடவடிக்கைக்கு கடும் எதிர்ப்புத்தெரிவிக்கவென லட்சக்கணக்கான இத்தாலியர் சிசிலித்தீவில் கூடினுர்கள்.

இம்மக்களுக்கு அனுப்பிவைத்துள்ள செய்தியொன்றிலேயே பாப்பரசர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். [கி]

# பட்டதாரிச் சான்றிதழ்: இலங்கை-சோவியத்உடன்பாடு

மாஸ்கோ - டிச. 19

கல்வி, விஞ்ஞானப்பட்டம் சம்பந்தப்பட்ட புதிய உடன்பாடொன்றில் சோவியத் யூனியனும் இலங்கையும் கைச்சாத்திட்டன.

இலங்கைக்கும் சோவியத் யூனியனுக்கும் இடையில் 1982 கைச்சாத்தான கலாசார, விஞ்ஞானத்துறை ஒத்துழைப்பு ஒப்பந்தத்தின் கீழ் இப்புதிய உடன்பாடு மாஸ்கோவில் கைச்சாத்தானது.

இந்த உடன்பாட்டின் பிரகாரம், இலங்கையின் விஞ்ஞானப்பட்ட சான்றிதழ்களுக்குச் சமமான இடத்தை சோவியத் கல்வி, விஞ்ஞான பட்டதாரிச் சான்றிதழ்கள் பெறுகின்றன. சோவியத் யூனியனின் உயர், விசேஷ நடுத்தரக் கல்வி துணை அமைச்சர் நிக்கொலாய் கொஃபின்ஸ்கியும் இலங்கையின் உயர்கல்வித் துணையமைச்சர் ஏ. எம். ஆர். அத்தனுயகாவும் கைச்சாத்திட்டனர்.

கடந்த இருபது வருடங்களில் உடன்பாட்டில் 600 இலங்கையர்கள் சோவியத் யூனியனின் கல்விநிலையங்களில் பட்டம் பெற்றுள்ளனர். இன்று 400க்கு மதிகமான இலங்கை மாணவர்கள் சோவியத் யூனியனில்பயிலுகிறுர்கள்.

உடன்பாடு கைச்சாத்தான பின்னர் உரையாற்றிய இலங்கை பிரதி அமைச்சர் திரு. ஏ. எம். ஆர். அத்தனுயகா, தேசிய ஆளணிகளைப் பயிற்றுவிப்பதில் சோவியத் யூனியன் அளித்துவரும் உதவிக்கு இலங்கை ஜனுதிபதியினதும் மக்களினதும் சார்பில் நன்றி தெரிவித்தார். இந்த உதவி தமது நாட்டின் பொருளாதார, கல்வி வளர்ச்சியில் பிரதான பாத்திரத்தை வகிக்கிறது, என்றும் அவர்கூறினுர்.

## சென். ஜோன்ஸ்

# முதலுதவிப் படைக்கு வாரியார் பாராட்டு!

[யாழ்ப்பாணம்]

கடந்த வாரம் கொக்குவில் மஞ்சவனப்பதி ஆலயத்தில் நடைபெற்ற தமது ஐந்துநாள் பிரசங்கத்தின்போது கடமையாற்றிய சென். ஜோன்ஸ் முதலுதவிப் படையினருக்கு திருமுருக கிருபானந்தவாரியார் பாராட்டுத் தெரிவித்துள்ளார்.

வாரியார், சென். ஜோன்ஸ் படையினரைப் பாராட்டி அவர்களுடைய விருந்தினர் புத்தகத்தில், சென் ஜோன்ஸ் அம்புலன்ஸ் படையின் சேவை நன்றாகவும், பயனுள்ளதாகவும் இருக்கின்றது. இப்படையினரின்சேவை மேலும் வளர்ச்சியடையப் பிரார்த்திக்கிறேன்' என்று எழுதியுள்ளார்.

சென். ஜோன்ஸ் படையைச் சேர்ந்த 20 தொண்டர்கள் வாரியார் பிரசங்கத்தின்போது தினமும் ஆலயச்சுற்றுடலில் முதலுதவி, பாதுகாப்பு வேலைகளில் ஈடுபட்டிருந்தனர். இப்படையின் யாழ், மாவட்ட பொறுப்பதிகாரி டாக்டர் ஈ. பி இராசையாவும் நேரடியாகச்சென்று அவர்களைக் கண்காணித்து ஆலோசனைகளை தெரிவித்தார். [கி]

## பால் சேகரிக்கும் நிலையம்

[கரவெட்டி]

நெல்லியடியில் பால் சேகரிக்கும் நிலையம் ஒன்று விரைவில் திறந்து வைக்கப்படவுள்ளது இதற்கான ஏற்பாடுகளை வடமராட்சி கால் நடைவளர்ப்போர் சங்கம் துரிதமாக மேற்கொண்டு வருகின்றது.

## கப்பலோட்டிய தமிழனுக்கு சிலை!

மதுரை, டிச. 19

மதுரை நகரில் 'கப்பலோட்டிய தமிழன்-சிதம்பரத்தின் சிலை நேற்று திறந்துவைக்கப்பட்டது.

முதலமைச்சர் திரு. எம் ஜி இராமச்சந்திரன் மார்பளவிலான இந்த வெண்கலச் சிலையினைத் திறந்துவைத்தார்.

## மணிவாக்கு

ஆறுகளில் நீர் பிறருக்காகப் பாய்கின்றது. பசுக்கள் பிறருக்காகப் பால் சுரக்கின்றன. மரங்கள் பிறருக்காகக் கனி தருகின்றன. இங்ஙனமே நல்லவர்களின் செல்வமும் பிறர்க்குப் பயன்படுகின்றது.

— அமரநீதி

# நமது நோக்கு

## விஞ்ஞானிகளுக்கு நிதியமைச்சர் விடும் சவால்

அரசியல்கட்சிகள் மற்றும் பார்வையாளர்கள் நாட்டின் இன்றைய பொருளாதார நிலையை ஏறக்குறைய ஒருவகையான நம்பிக்கையின்மை கலந்த கணிப்புடன் பார்க்கின்றனர்.

அரசின் அளவு கடந்த பிரசாரமும், அரசுசார்பான பத்திரிகைகளின் தடல்புடலும் இதற்குப் புறநடையென்பது சொல்லாமலே விளங்கும்.

கடந்த ஐந்தாண்டில் இன்றைய ஆட்சிநிகழ்த்திய சாதனைகள் சரித்திரம் புகழும் தன்மையனவென்றும், அவற்றின் சாதனைநாயகன் இன்றைய ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனா என்றும் இப்பத்திரிகைகள் வெளியிடும் சிறப்புமலர்கள் சர்வஜன வாக்கெடுப்புக்கு உறுதுணையாக வெளிவருகின்றன. ஆட்சியின்கொள்கையைக் காப்பாற்றுவதே ஒரு நோக்கம் போலும்.

இவற்றை நாம் போலிப் பிரசாரம் என்று கொள்வது நியாயமாகாது; 'அபிவிருத்தி' என்னும் பெயரில் பொதுமக்களின் ஆதரவை ஓரளவிற்குத் திரட்டியதாலேயே ஜனாதிபதி தேர்தலில் இன்றையஜனாதிபதிக்கு மீண்டும் ஒரு தடவை வெற்றி கிட்டியது.

ஆனால் பிரசாரத்தில் உண்மை எவ்வளவு என்று பொதுமக்கள் உணர்வதற்கு நிதியமைச்சர் திரு. ரொனி டி. மெல் இலங்கை விஞ்ஞான முன்னேற்ற சங்கத்தின் 38வது மாநாட்டில் நிகழ்த்திய உரை பெருமளவிற்கு உதவுகின்றது

வரவு செலவுத் திட்டத்தை உரிய காலத்தில் வெளியிட முடியாத நிதி அமைச்சரின் பேச்சு எவ்வாறு நம்பிக்கை ஒளி உடையதாக இருக்கும்? தலைவலிதானும் பட்டவர்க்கே தெரியும்.

நாட்டின் வறுமையை நீக்கும் பொறுப்பை விஞ்ஞானிகள் தலையில் சுமத்திவிடும் வகையில் அமைந்தது நிதியமைச்சரின் களைப்பு நிறைந்த பேச்சின் தாற்பரியம்.

நாட்டின் ஜனத்தொகையில் அரைவாசிபேர்மாதம் முந்நூறுரூபாய்க்குக் குறைந்த வருமானமுடையவர்களே என்றும், வருடா வருடம் இரண்டு லட்சம் இளைஞர்களுக்கு வேலை கொடுக்கும் பொறுப்பு ஆட்சிக்கு பெருஞ் சவாலாக விருக்கிறதென்றும், விஞ்ஞானிகளுக்கு தமது உள்ளக் குமுறலை வெளியிட்டிருக்கிறார் நிதி அமைச்சர், "என். எம்" என்பது சுதந்திர ஆட்சியில் "நோயாளி" என்று கேலியாயிருந்தது.

ஆட்சியை நீடிக்க அரசு தலைகொண்டுபுரவையாடும் இவ்வேளையில் நிதி அமைச்சர் நாட்டின் பொருளாதார 'வங்குரோத்தை' வெளிப்படுத்தத் தயங்கவில்லை என்றால் நிலைமை அவர்கூறியதிலும் பார்க்க மோசம் எனக் கொள்ளலாம்.

பசுமைப் புரட்சியில் வெற்றி கிட்டுமென்று நினைத்த போதும், உரத்தின் உயர் விலையால் உற்பத்திச் செலவு அதிகரித்துவிட்டதென்று தெரிவித்து விஞ்ஞானிகளை இதற்குள் இழுத்துவிட முயல்கிறார் நிதி அமைச்சர்.

"உங்கள் பரிசோதனை மாடிகளில் ஒதுங்கியிருக்காமல் வெளியே வாருங்கள்; நாட்டின் அவசிய தேவைகளைக் கண்ணுற்றுப் பாருங்கள்; மண்வளம், மனித வளம், எங்கள் பண்பாடு — இவற்றையெல்லாம் மனதிற் கொண்டு, நாடு உணவில் தன்னிறைவு காணும் வகையில்— ஒரு ஐந்து ஆண்டுத் திட்டத்தின் அடிப்படையில் எமது நாட்டுக்கேற்ற, சிக்கனமான உர வகை, மின்சக்தி, முதலிய தொழில் நுட்ப ஆய்வுகளைக் கண்டுபிடித்து மக்களின் வறுமையை ஒழிக்க உடன் உதவுங்கள்"

நிதி அமைச்சரின் அறைகூவல் இத்தகையது.

நாம் கம்பியூட்டர் யுகத்துக்கு ஆயத்தமாவோம்' என்கிறார் வேறொரு அமைச்சர்.

இன்னும் ஓரிரு ஆண்டுகளில் மகாவலியின் துரிதப் படுத்தப்பட்ட திட்டம் எங்கள் நாட்டை பாலும் தேனும் ஆறாகப் பாயும் நாடாக்கி விடுமென்கிறார் இன்னொரு அமைச்சர்.

நிதி அமைச்சரின் கூற்றுக்கு முழுமாறாகவே இன்றைய நாடளாவிய பிரசாரம் நடைபெறுகின்றது.

விவசாயத்தில் இளைஞர்களை ஈடுபடுத்தவும், அதற்கேற்ப கல்விமுறையை மாற்றியமைக்கவும், உழவு யந்திரத்துக்குப் பதிலாக, மிருகம் இழுக்கும் கலப்பையும் வெளிநாட்டுஎண்ணெய் எரிபொருளுக்குப் பதிலாக, சுதேச கண்டுபிடிப்பும், மேனாட்டு உல்லாசத் துறையை நாம் 'கொப்பியடித்து' மாடமாளிகைகள் அமைப்பதைக் கைவிட்டு, இலகுவான, வசதியான, சிக்கனமான கட்டிடங்களில் நம்பிக்கைகொள்வதும் நிதி அமைச்சரின் நிதானமான கருத்துக்கள்.

நிதானமான பேச்சாலும், கடந்த ஐந்தாண்டில் அது ஒரு திட்டமாவதற்கு எதுவும் நடைபெறவில்லையே. நாட்டின் பணப்பைக்குப் பொறுப்பானவருக்கு இவ்விடயத்தில் அதிகாரம் இல்லையென்பது தெளிவு.

'தரப்படுத்தலை' எவ்வாறு கடந்த அரசு கண்டிப்பாய்க் கடைப்பிடித்ததோ, அதனை இந்த அரசு முன்பு கண்டித்தும், பின்பு கைவிடாது மாறுவேடத்தில் அமுல்நடத்துகிறதோ அதேபோல், திறந்த பொருளாதாரக்கொள்கை, நாட்டின் நிதிநிலைமையை குட்டிச்சுவராக்கிவரும் போதும் அதனை ஒப்புக்கொள்ளாது வெளிநாடு, சர்வதேச நிறுவனங்களை நம்பி, அந்தக் கொள்கைக்குத் தொடர்ந்து பிரசாரம் நடப்பதால் நிதி அமைச்சரின் தீர்வு விஞ்ஞானிகளுக்குச் சவாலாகப் பரிணமிக்கிறது.

பாவம், விஞ்ஞானிகள்! மனித விவகாரங்களில் 'மூக்கைப்பிடித்தால் வாய் திறக்கமுடியாத' ஆன்மீகப் பிறவிகளை இந்தப் பாரிய பணிக்குத் தோள் கொடுங்கள் என்றால் அது நடக்குமா?

அதேசமயம் அரசாங்கம் வருடாந்த வரவு-செலவுத் திட்டத்துக்கு வழிகாண வேண்டுமே.'

இன்றைய அரசு ஆட்சியில் தொடருமானால், வெளியிலிருந்து மேலும் நிதி முதலிய உதவிகள் கிட்டலாம்; அந்தநிலையில், மகாவலிபோன்ற அடி முடியில்லாத திட்டங்களுக்கு 'ஹெமிங் ஹெமிங்' சொல்லி, எங்கள் நாடு சுதந்திர நாடு என்று நாமும் பிறரும் நம்பும் வகையில் இந்நாட்டு கடல், மண், மனித வளங்களைப் பெருக்குவதே தப்பும் வழியாகும்.

இந்த ஆட்சியில் நம்பிக்கை வைக்கும் மக்களுக்குப் பொருளாதார விடுதலை அவசியம்; அதற்குரிய அரசியல் விடுதலை அவர்கள் பங்குபற்றும் பொதுத் தேர்தல் உரிமையில் உண்டென்பது இன்றைய உண்மைநிலை கற்பிக்கும் பாடம்.

## பாவை நோன்பு கன்னியர்க்கேயன்றி அனைவருக்கும் உரியது

மார்கழி மாதத்தில் கன்னிப் பெண்கள் பாவைநோன்பு அனுட்டிப்பதைக் கண்ட மாணிக்கவாசகர் அருளிய திருவாசகமே திருவெம்பாவையாகும். அப்பெண்கள் தம்நோன்பின் பயனாக சிவபிரானிடம் சிவ அன்பர்களான கணவர்களை வேண்டுவதாக திருவெம்பாவையில் 19ம் பாடல் கூறுகின்றது.

விரதமனுட்டிக்கும் பெண்கள் ஒருவரை ஒருவர் துயிலெழுப்புவதாகவும் நீராடுவதாகவும் சிவசன்னிதானத்தை அடைந்து தோத்திரம்செய்து விண்ணப்பிப்பதாகவும் மணிவாசகர் திருவெம்பாவையை அருளியுள்ளார்.

ஒவ்வொருபாடலிலும்உள்ள அரிய தொடர்களின் நயமும் எளிமையும்; எத்தனைத்தரம் படிக்கினும் கேட்பினும் நினைக்கினும் தேன்போல இன்பம் தரும் சிறப்புடையன.

எங்களுக்கு போட்டிபோட்டுக் கொண்டு பிறவிகள் வரும். ஆனால் பிறவிகள் இல்லாமற் போகும் பக்குவம் வந்தால் தான் நிரந்தர இன்பம் ஏற்படும். உயிர்களாகிய எங்களுக்கு நிரந்தரஇன்பம் ஏற்படுவதற்காக தில்லைக்கூத்தன் வினைகளுடன் போட்டிபோட்டுக்கொண்டு இடைவிடாது பஞ்சகிருத்திய நடனம் ஆடிக்கொண்டிருக்கின்றான். இப்படியாக சிவன்தனக்கு ஒருபயனும் கருதாது உயிர்கள் மேற்கொண்ட அகாரணமான கருணையினால் ஐந்தொழிற்கூத்தாடிக் கொண்டிருக்கின்றான் என்பதை எண்ணி எண்ணி நாமெல்லாம் சிவநேயர்களாகக்கூடியமுறையில் 'ஆர்த்த பிறவித் துயர்கெட நாம் ஆர்த்தாடும்தீர்த்தன் நற்றில்லைச்சிற்றம்பலத்தே தீயாடும் கூத்தன் என்று பாடியுள்ளார். இவை போன்ற இனிய மாணிக்கவாசகங்கள் நிறைந்த திருப்பாடல்களை திருவெம்பாவைக்காலங்களில் சித்த சுத்தியுடன்பாடி இன்புறலாம்.

திருவெம்பாவைவிரதமனுட்டித்து கன்னிப்பெண்கள் நல்ல சிவநேயம்மிக்க கணவரை அடைவதுபோன்று மாணவர் கல்வியையும் அவரவர் தாம்

வேண்டிய நலன்களைஅடைவது மட்டுமன்றிச் சிவப்பேற்றையும் அடையலாம்.

திருவாதிரை எனப்படும் சிவனுக்குரிய நட்சத்திரத்தை முன்னிட்டு சிதம்பர நடராசப் பெருமானை உபாசிக்கும் சிறப்புடைய திருவெம்பாவை வழிபாடு சிதம்பர மகிமையை அறிந்து சிதம்பர தரிசனத்தை தரிசிப்பதற்கு பேருபகாரமாகவும் அமையும்.

நம்முன்னோர் திருவெம்பாவைக் காலத்தைப் பேணி விரதம்வழிபாடு என்பன செய்வது மட்டுமன்றி திருவாதவூரர் புராணத்தைக் கேட்டுச் சிந்தித்தலாகிய ஞானபூசையினை செய்து சிதம்பர தரிசனம் செய்தும் சிதம்பரத்தைக் குறித்துப் பல நிலையான தர்மங்களும் கூடச்செய்து மனிதப் பிறவியைப் பயனுடையதாக்கியுள்ளனர்.

## "அருளாளன்"

கண்ணைத்துயின்று அவமே காலத்தைப்போக்காதே, நாம் ஆர்த்தபிறவித் துயர்கெட ஆர்த்தாடும் தீர்த்தன் உய்யும் வகை எல்லாம் உய்ந்தொழிந்தோம் எய்யாமற்காப்பாய் எமை, சித்தம் அழகியார் பாடாரோ நம்சிவனை, அத்தன் ஆனந்தன் அமுதன் என்றள்ளூறித் தித்திக்கப்பேசுவாய், என்பனபோல் வரும் மாணிக்கவாசகங்களின் நயமும் சிறப்பும் உயர்வானவை. விழித்திருக்கும் வேளையில் கொலை- வஞ்சனை-சூது தனக்குப்பிறர்க்கும் பயனற்ற செயல் ஆகியவற்றில் இரசனை உடையோர் தூக்கத்தில் காலத்தைக் கழிப்பது நன்று பரோபகாரம், இன்சொல்-முயற்சி இறைவழிபாடு-தியானம் முதலியவற்றில் ஈடுபடும் பண்பினர் கண்ணைத்துயின்று காலத்தை கெடுக்கலாகாது என்பதை மணிவாசகர் மிகவும் எளிமையாகவும் சுருக்கமாகவும் கண்ணைத்துயின்று அவமே காலத்தைப் போக்காதே என்று கூறியுள்ளார்.

உயிர்செய்கின்ற நினைக்கின்ற நன்மை தீமைகளின் விளைவாக ஏற்படும் பாவபுண்ணியங்களை அனுபவிக்க பிறவிகளை மாறிமாறி எடுக்கவேண்டும் என்பது நம்சமய உண்மையாகும். இவ்வுண்மையின்படி

## பல்வேறு தேசிய இனங்களின் தாயகம்

பல்வேறு தேசிய இனங்களின் தாயகம் அமைக்கப்பட்ட அறுபதாவது ஆண்டு பூர்த்தியை சோவியத் யூனியன் இவ்வாரம் கொண்டாடுவதை யொட்டி இக்கட்டுரை இங்கு வெளியாகிறது.

சோவியத் யூனியனில் 100க்கு மேற்பட்ட தேசங்களும், தேசிய இனங்களும் உள்ளன. இவற்றில் மிகப் பெரியது ரஷ்ய தேசம். இதனை அடுத்து வருபவை உக்ரைன், பைலோ ரஷ்யா, கஜாக் முதலிய தேசங்கள்... இந்த நாட்டில் பல்வேறு குடியரசுகளும் பிரதேசங்களும் உள்ளன. இவற்றின் இயைபு பெரிய அளவுக்கு வேறுபட்டது. உதாரணமாக, வடகாகசஸில் அமைந்துள்ள தாகெஸ்தானில் மிகச்சிறிய சிறுபான்மையினரான அகுல்கள் உட்பட அலார்கள், லெஸ்சினியர்கள், தார்கியர்கள், துமிக்குகள், லாக்குகள் மற்றும் பல தேசிய இன மக்கள் வாழ்கிறார்கள்.

நாட்டின் ஆசியப்பகுதி, சைபீரியாவும் தொலைக்கிழக்கும்கொண்டது. எல்லையற்ற பரப்பு உடையது. இப்பகுதி மிகப் பல தேசிய இனமக்களின் தாயகமாக விளங்குகிறது. கோமந்தோர்ஸ்கியே தீவுகளில் வாழும், நாட்டிலேயே மிகக் குறைந்த எண்ணிக்கையிலுள்ள அலெயுத்துக்களும் (சுமார் 500 பேர்) ஏறத்தாழ அதே எண்ணிக்கை கொண்ட நகிதால்களும் இவர்களில் அடங்குவர்.

அனைத்து சோவியத் தேசிய இன மக்களுக்கும் சொந்தமாகத் தொன்மைமிக்க வரலாறும், மொழியும். கலையும் உண்டு. அவர்களது பொருளாதாரமும், கலாசாரமும், வாழ்க்கை முறையும் நவீனமானவை. அதே சமயம் அவர்களது தேசியப் பாரம்பரியங்கள் மிகக் கவனமாகப் பாதுகாக்கப்படுகின்றன. பல்வேறு தேசிய இனங்கள் வாழும் இந்த நாட்டுக்கே உரிய ஒரு சிறப்பு அம்சம் இது.

அலுவல்களின்போதும், விடுமுறைகளின் போதும், ரயில் பயணங்களிலும் மக்களிடையே ஏற்படும் தொடர்புகள் பல சந்தர்ப்பங்களில் கடிதப் போக்குவரத்து மூலம்வலுப்பெற்று, நீடித்த நட்பாக மலர்கின்றன. ரஷ்ய மொழி அதிகார பூர்வமான அரசு மொழி அல்ல. எனினும் நாட்டின் மொத்தமக்கட் தொகை 26கோடி 77லட்சத்தில் சுமார் 21 கோடி 50 லட்சம் மக்கள் இந்த மொழியைப்பேச முடியும் என்பதை அண்மைய குடிமதிப்புப் புள்ளிவிபரக் கணக்கு காட்டுகிறது. ரஷ்யமொழி தற்போது நாட்டின் சகல பகுதிகளிலும் ஒரு சிறந்த தொடர்பு மொழியாகத் திகழ்கிறது.

### லெனின் கருத்து

தேசிய இனப்பிரச்னைகள் பற்றி லெனின் இவ்வாறு கூறுகின்றார்:

'நாம் முற்று முழுக்கச் சர்வ தேசியவாதிகள், சகல தேசிய இனங்களையும் சேர்ந்த தொழிலாளர்கள் குடியானவர்களின் தன்னிச்சையான நேசக் கூட்டாக நாம் பாடுபடுகிறோம்.'

'தேசிய இனங்களின் தன்னிச்சையான ஒன்றியத்தை, ஒரு தேசிய இனம் மற்றொன்றின் மீது வன்முறையைப் பயன்படுத்தாத ஒன்றியத்தை பூரண நம்பிக்கை. தன்னிச்சையான சம்மதம், சகோதரத்துவ ஒற்றுமை ஆகியவற்றை அடித்தளமாகக் கொண்ட ஒன்றியத்தை நாம் விரும்புகிறோம்.'

'குறுகிய தேசிய இனத் தன்மைவாய்ந்தது என்ற கருத்து ஏற்பட இடமில்லாமல் செய்வதற்காகவே, கட்சி அதனை ருஸ்காயா என்று அழைக்காமல் ரோசிஸ்காயா என்று அழைத்தது.' (ருஸ்காயா என்பது ரஷ்ய இனத்தையும் ரோசிஸ்காயா என்பது ரஷ்ய நாட்டையும் குறிப்பதாகும் )

'பாட்டாளிவர்க்கம் குறுகிய தேசிய இனவாதத்துக்கு ஆதரவளிக்கமுடியாது. மாறாக தேசிய இனங்களுக்கிடையேயுள்ள வேறுபாடுகளை நீக்குவதையும், தேசியத்தடை மதில்களை அழிப்பதையும் அது ஆதரிக்கிறது. தேசிய இனங்களுக்கிடையிலான பிணைப்பை மேலும் மேலும் நெருக்கமுறச்செய்யும் அனைத்தையும் அது ஆதரிக்கிறது.

"தேசிய இன ஒடுக்குமுறை தேசிய இனச்சண்டைகள், தேசிய தனித்தொதுங்கி நிற்கும் தன்மை ஆகியவை மலிந்த பழைய உலகத்துக்கு எதிராகச் சகல தேசிய இனங்களையும் சேர்ந்த உழைப்பாளிமக்களின் ஒற்றுமை நிலவுவதும் எவ்வித சலுகைகளுக்கோ, மனிதனை மனிதன் ஒடுக்குவதற்கோ இடமற்றதுமான புதியதோர்

[8-ம் பக்கம் பார்க்க.

# ஜி. ஸி. ஈ. (சாதாரணம்) பரீட்சை:

## 184 பரீட்சை நிலையங்களில் நடைபெறும்

[கரவெட்டி]

இம்மாதம் 30ம் திகதிஆரம்பமாகவுள்ள ஜீ ஸி. ஈ சாதாரண தரப் பரீட்சை யாழ்ப்பாண மாவட்டத்தில் 184 பரீட்சை நிலையங்களில் நடைபெறவுள்ளது

இப்பரீட்சை நிலையங்களில் தகுந்த பாதுகாப்பு அளித்து பரீட்சையை நடத்த கல்வித் திணைக்களமும், பாதுகாப்புப் படைப் பிரிவும் நடவடிக்கை மேற்கொண்டுள்ளன.

பரீட்சையின் போது எந்த வித அசம்பாவிதங்களும்இடம் பெறு வண்ணம் உஷார் நிலையில் பாதுகாப்புப் படைகள் வைக்கப்பட்டுள்ளதாக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

## வயோதிபர்களை பாராட்ட ஏற்பாடு

[கரவெட்டி]

இமையாணன் பகுதியில் வாழும் 70 வயதிற்கு மேற்பட்ட வயோதிபர்களும் பாராட்டிக் கௌரவிக்கப்படவுள்ளனர். இதற்கான ஏற்பாடுகளை இமையாணன் கிராமோதய சபை மேற்கொண்டுள்ளது.

இம் மாதம் 31ம் திகதி இமையாணன் மாதர் முன்னேற்றச் சங்கத்தில் கிராமோதய சபைத் தலைவர் திரு க. அப்புக்குட்டி தலைமையில் நடைபெறும் இப் பாராட்டு விழாவில் பிரதம விருந்தினர்களாக உடுப்பிட்டி எம். பி. திரு. த. இராசலிங்கம், கரவெட்டி உதவி அரசாங்க அதிபர் திரு. இ ஐயாத்துரை ஆகியோர் கலந்து கொள்கின்றனர் விழாவில் கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறவுள்ளன.

[க]

## பரீட்சார்த்தமாக கோதுமை

[புலோலி]

அடம்பன் விவசாயப்போதனாசிரியர் பகுதியில் பரீட்சார்த்த கோதுமைப் பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்பட இருக்கிறது. இதற்கான நடவடிக்கைகளை அடம்பன் விவசாயப் போதனாசிரியை திருமதி. தனவதி கந்தசாமி மேற்கொண்டு வருகின்றார்.

அம்பன், கெருடாவில், பருத்தித்துறை ஆகிய மூன்று விவசாய விஸ்தரிப்புச் சேவையாளர் பகுதிகளில் பதினெட்டு மாதிரித்துண்டங்களில் இப்பரீட்சார்த்த கோதுமைப் பயிர்ச் செய்கைசெய்யப்படும்.

## கண்டனம்

[கரவெட்டி]

வவனியா இறம்பைக்குளம் புனித அந்தோனியார் ஆலயத்தில் நடைபெற்ற உண்ணாவிரதத்தின்போது, இடம்பெற்ற தாக்குதல் சம்பவத்திற்கு யாழ். மறை மாவட்டக் கத்தோலிக்க ஆசிரியர் சங்கம் பலத்த கண்டனமும், கவலையும் தெரிவித்துள்ளது.

## சுவீப்முடிவுகள்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தலா ரூபா 1,485 ஆறுதல் பரிசுபெறும் நூறு டிக்கட்டுகள் வருமாறு

| | |
|---|---|
| 08 A 0210 | 10 A 0158 |
| 15 A 0172 | 15 A 0404 |
| 15 A 0585 | 04 B 0651 |
| 07 B 0098 | 11 B 0676 |
| 17 B 0882 | 02 C 0575 |
| 16 C 0021 | 16 C 0839 |
| 20 C 0363 | 11 D 0021 |
| 14 D 0468 | 19 D 0713 |
| 22 F 0385 | 12 G 0901 |
| 15 G 0166 | 17 G 0468 |
| 19 G 0264 | 01 H 0052 |
| 07 H [illegible]59 | 17 H 0337 |
| 18 H 07[illegible]8 | 04 J 0519 |
| 09 J 0537 | 13 J 0520 |
| 20 J 0145 | 04 K 00[illegible]3 |
| 14 K 0311 | 06 K 0679 |
| 09 K 0969 | 11 K 0854 |
| 15 K 0602 | 18 K 0799 |
| 20 K 0282 | 21 K 0792 |
| 07 L 0587 | 10 L 0852 |
| 17 L 0743 | 19 L 0120 |
| 21 L 0003 | 01 M 0114 |
| 11 M 0584 | 20 M 0931 |
| 21 M 0088 | 22 M 0102 |
| 22 M 0305 | 05 N 0953 |
| 13 N 0434 | |
| 19 N 0531 | 20 N 0566 |
| 23 N 0461 | 18 O 0019 |
| 19 O 0610 | 01 P 0240 |
| 11 P 0565 | 16 P 0716 |
| 21 P 0253 | 22 P 0579 |
| 13 Q 0915 | 19 Q 0707 |
| 13 R 0980 | 19 R 0623 |
| 08 S 0719 | 15 S 0066 |
| 21 S 0494 | 23 S 0243 |
| 03 T 0703 | 12 T 0426 |
| 14 T 0171 | 15 T 0206 |
| 15 T 0812 | 02 U 0506 |
| 03 U 0814 | 10 U 0073 |
| 5 U 0463 | 16 U 0701 |
| 23 U 0755 | 15 V 0235 |
| 09 V 0654 | 13 V 0588 |
| 23 V 0493 | 12 W 0122 |
| 01 X 0660 | 02 X 0734 |
| 03 X 0601 | 08 X 0495 |
| 10 X 0350 | 22 X 0901 |
| 16 X 0057 | 15 Y 0359 |
| 17 Y 0295 | 06 Z 0626 |
| 15 Z 0751 | 16 Z 0092 |
| 16 Z 0189 | 20 Z 0316 |
| 22 Z 0869 | |

இவையாவும் உறுதிப்படுத்தப்படவேண்டும்.)

## வெள்ளத்திற்கு பலியானவரின் சடலம் 5 நாட்களின் பின் சுடுகாட்டில் மீட்பு!

[கிளிநொச்சி]

வெள்ளத்தால் இழுத்துச் செல்லப்பட்ட இரண்டுபிள்ளைகளின் தந்தை ஒருவரின் சடலம் ஐந்து தினங்களின் பின் சுடுகாட்டில் மீட்கப்பட்டது.

கிளிநொச்சியில் இடம் பெற்ற வெள்ளப் பெருக்கின் போது முரசுமோட்டையைச் சேர்ந்த பெருமாள் பாலசுப்பிரமணியம் என்பவர் வெள்ளத்தால் இழுத்துச் செல்லப்பட்டு பரிதாபமாக மரணமானார் இம்மரணம் சம்பந்தமான விசாரணையை மரண விசாரணை அதிகாரி திரு மு. யோகலிங்கம் மேற்கொண்டார் சாட்சிகளை கிளிநொச்சி பொலிசைச் சேர்ந்த ஜனப் ஆர். ரி. டரீத் அஜர் செய்தார்.

விசாரணையின் போது மரணமானவரின் மனைவி பா.சுசீலா சாட்சியமளிக்கையில்; ''மரணமான கணவரும் முத்தையா என்பவரும் ஐந்துதினங்களுக்கு முன்னர் கமத்திற்கு வேலைக்கு சென்றார்கள். அன்று மாலை கறுப்பையா எங்கள் வீட்டிற்கு வந்து கணவரை வெள்ளம் இழுத்துச் செல்வதாக கூறினார். உடனே அயலவரின் உதவியுடன் தேடுதலில் ஈடுபட்டு பலன் கிடைக்காததால்பொலிசில் முறையிட்டோம் நான்கு தினங்கள் பொலிசாரும் தேடுதலில் ஈடுபட்டனர். பலன் கிடைக்கவில்லை. ஐந்தாவது தினம் கணவர் சுடுகாட்டின் அருகிலுள்ள மதவருகில் இறந்த நிலையில் கிடப்பதாக அறிந்து அவரை மீட்டோம். அப்போது அவரது கையும் முதலையால் தீண்டப்பட்டு துண்டிக்கப்பட்டு இருந்தது''.

மரணவிசாரணை அதிகாரி திரு. யோகலிங்கம் விபத்து மரணமெனத் தீர்ப்பளித்தார்.

[க]

## நடவடிக்கை

[புலோலி]

தும்பளை கிராமோதயசபைப் பகுதிக்குள் மரம் நாட்டும் நடவடிக்கையை ஊக்குவிக்கும் முயற்சிகளை தும்பளை கிராமோதயச்சபை மேற்கொண்டுள்ளது.

## ம.வி. முன்னணி கண்டனம்

(யாழ்ப்பாணம்)

பயங்கரவாத தடைச்சட்டத்தை பாவித்து கைதுசெய்யப்பட்ட மதகுருமார்கள், கல்விமான்கள் இளைஞர்களை விடுவிக்கக்கோரி வவுனியா இறம்பைக்குள புனித அந்தோனியார் தேவாலயத்தில் சாத்வீக முறையில் உண்ணாவிரதமிருந்த பெண்களையும் குழந்தைகளையும், ஏனையோரையும் மிருகத்தனமாக தாக்கிய பொலிசாரின் அத்துமீறிய செயலை மக்கள் விடுதலை முன்னணி வன்மையாக கண்டிக்கிறது.

என்று ம. வி. முன்னணியைச் சேர்ந்த திரு இ. சிங்கயாப்பாணர் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்

ஜனநாயக விரோத,பலாத்கார செயல்களில் பொலிஸ், இராணுவத்தை ஏவிடும் முதலாளித்துவ அரசை வன்மையாக கண்டிப்பதுடன், இவ்வாறானசெயல்களை உடன் நிறுத்துமாறும் மக்கள் விடுதலை முன்னணி அரசை வற்புறுத்துகின்றது'' அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

## பொலிஸ் நிலையம் இடமாற்றம்?

[கரவெட்டி]

வல்வெட்டித்துறைப் பொலிஸ் நிலையம் வல்வை வெளியிலுள்ள கட்டிடமொன்றிற்கு இடம் மாறலாம் எனத் தெரிகிறது.

இது சம்பந்தமாக பொலிஸ் உயர் அதிகாரிகள் குழு ஒன்று அண்மையில் வல்லையில் உள்ள பிரஸ்தாப கட்டிடத்திற்குச் சென்று பார்வையிட்டதாகவும் இதனைத்தொடர்ந்து கட்டிடத்தை வாடகைக்குப் பெறுவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு இருப்பதாகவும் கூறப்படுகிறது.

கட்டிடம் கிடைக்கப்பெறும் பட்சத்தில் வல்வெட்டித்துறை இராணுவ முகாமை இங்கே இடமாற்றம் செய்துவிட்டு, இராணுவ முகாம் இருந்தஇடத்துக்கு வல்வைபொலிஸ் நிலையத்தைக் கொண்டுசெல்வதற்கும் ஆலோசிக்கப்பட்டு இருப்பதாக அறியவருகிறது.

காப்புறுதிக்கு எய்ற்கன் ஸ்பென்ஸ்

எமது யாழ்ப்பாண வாடிக்கையாளர்களின் வசதிக்காக . . . ஸ்ரீலங்காவில் காப்புறுதித் துறையில் 100 வருடங்களுக்கு மேல் அனுபவமுடைய காப்புறுதித் தாபனமாகிய எய்ற்கன் ஸ்பென்ஸ் அன்ட் கம்பனி லிமிடட் தமது கிளை அலுவலகத்தை 190 ஆஸ்பத்திரி வீதியில் (ஓட்டோஸ் பில்டிங்) நிறுவியிருக்கிறார்கள்.

ஆயுள், வாகனம், தீ, கொள்ளை, தனிப்பட்டவிபத்து, கடல் அபாயம், சுகாதாரம், நானாவிதம் போன்ற சகல காப்புறுதி விடயங்களிலும் தனித்துவமான கவனத்துடன் உடனடிசேவையைப் பெற தயவு செய்து எமது கிளை அலுவலகத்திற்கு வருகை தரவும்.

எய்ற்கன் ஸ்பென்ஸ்
பாரம்பரிய சேவையுடைய ஒரே நிறுவனம்.

எய்ற்கன் ஸ்பென்ஸ் அன்ட் கம்பனி லிமிட்டெட்

தேசிய காப்புறுதிக் கூட்டுத்தாபனப் பிரதான பிரதிநிதிகள்
315, வக்சோல் வீதி, கொழும்பு 2
தொலைபேசி: 24604-6 23399

## கோண்டாவில் இரட்டைக் கொலை:

# சந்தேகத்தில் மூவர்கைது; இருவர் தேடப்படுகின்றனர்!

(யாழ்ப்பாணம்)

கோண்டாவிலில் நடைபெற்ற இரட்டைக் கொலை, கொள்ளைச் சம்பவங்கள் தொடர்பாக, சுன்னாகம் பொலிசார் சந்தேகத்தின் பேரில் மூவரைக் கைதுசெய்து விசாரணைக் குட்படுத்தியுள்ளனர்.

கடந்த 7ம் திகதி அதிகாலை நகைகள் அடகுபிடிக்கும் வயோதிபத் தம்பதிகளான சின்னப்பு மார்க்கண்டு, அவரது மனைவி நல்லம்மா ஆகிய இருவரும் கத்தியால் வெட்டியும், துப்பாக்கியால் சுட்டும் கொலைசெய்யப்பட்டதுடன், பெறுமதிவாய்ந்த நகைகளும், ரொக்கமும் கொள்ளை அடிக்கப்பட்டது தெரிந்ததே. (மா)

## கரணவாயில் மாதர் சங்கம்

(கரவெட்டி)

கரணவாய் வடக்கில் மாதர் சங்கம் 25 ம் திகதி அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்படவுள்ளது. இப் புதிய மாதர் சங்கத்தை, கரணவாய் வடக்கு கிராமோதய சபைத் தலைவர் திரு. ஆ. க. மாணிக்கம் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு ஆரம்பித்து வைப்பார்.

# இன்றைய பலன்

மார்கழி மாதம் 5ந் திகதி
திங்கட்கிழமை
(20—12—82)

மேடம்: மதிப்பு உயரும். இல்லத்தில் இனிமை தவழும். அறிஞர்களின் ஆதரவுதாராளமாகக் கிடைக்கும். எவ்வித சிக்கலான பிரச்னையையும் பேச்சுவன்மையினால் சமாளித்து விடுவீர்கள்.

இடபம்: செய்தொழில் மூலம் சிறப்புக்கள் கிடைக்கும். பெரியவர்கள் ஆதி அவசியம் உண்டு. போட்டா போட்டிகளில் வெற்றி உங்கள் பக்கம் இருக்கும்.

மிதுனம்: உறவாடிக் கெடுப்பதற்கு பகையாளிகள்வருவர். உற்சாகம் குன்றும், பிரயாணத்தின்போது பொருள் தவறக்கூடும். சிலருக்கு உஷ்ண ரோகம் சம்பந்தமான நோய் ஏற்படும்.

கடகம்: ஆனந்தமான வாழ்க்கை அன்பர்களின் வருகை உங்களை உற்சாகப் படுத்தும். கணவன் மனைவி உறவு முறைகள் மிகநெருக்கமாக இருக்கும்.

சிங்கம்: தொழில் துறையில் எதிர்பாராத நஷ்டத்திற்கு இடமுண்டு. புதிய முதலீடுகளை ஒத்திவைக்கவும். நண்பரின் கடிதம் வேதனையைத்தரலாம், மனத்திடம் வேண்டும்,

கன்னி: உடம்பை அலட்டிக் கொள்ளாமலேயே உயர்வுக்கு வழிகாண்பீர்கள். மேலிடத்து உதவி உற்சாகத்தை அளிக்கும். பிதாவழி மூலம் தகுந்த உதவி கிடைக்கும்.

துலாம்: பொறியியலாளர்களுக்குப் பொன்னான தினம், புகழும் பொருளும் குவிவதற் [illegible] முண்டு [illegible] வாகத் தொழில் வெற்றி [illegible]ண்டு. பிரயாணத்திற்கு உ[illegible]ந்தநாள்.

விருச்சிகம்: [illegible]யில் புதிய அபிவிருத்தி தென்படும். சுற்றுடலில் உற்சாகமான வரவேற்புக் கிடைக்கும். அதிக [illegible] ஓடமுண்டு, [illegible]ணி நடக்கவும்.

தனு: எதிலும் மந்த நிலை தென்படும். கடன்தொல்லை அதிகரிக்கலாம். தனிவழியில் நாட்டம் செலுத்துவீர்கள். சீறிவரும் கோபத்தை அடக்குவீர்கள்.

மகரம்: நிச்சயமற்ற நிலையில் வேதனைப்படுவீர். எதிர்பார்த்த பொருள் வரவுஇன்று தடைப்படலாம். உடல் நலத்தில் அதிக கவனம் செலுத்த வேண்டும். உணவு விடயத்தில் சுகாதாரம் வேண்டும்.

கும்பம்: வார்த்தைஜாலம் செய்வதன் மூலம் மற்றவர்களை வசிகரிப்பீர்கள். எழுத்தாளர்களுக்கு சிறப்பான தினம். இருக்கும் இடத்தில் ஆதரவு பெருகும். சிலருக்கு பொதுஜனத் தலைமையும் கிடைக்கலாம்,

மீனம்: பலவழிகளிலும் பணம் செலவாகும். நண்பர்கள் சகவாசத்தால் சிக்கல்களில் மாட்டிக்கொள்ள நேரிடும். நடு நிலைமை நன்று. அவதானம் வேண்டும்.


சோதிடக்கலாநிதி
திருமலை
க. வேலுப்பிள்ளை

## பதவி உயர்வு



(யாழ்ப்பாணம்)

கொக்குவில் கிழக்கைச் சேர்ந்தவரும் கொக்குவில் இந்துக் கல்லூரி பிரதம பாடசாலை, யாழ் இந்து மகளிர் கல்லூரி அபிவிருத்திச் சங்கங்களின் செயலாளரும், நல்லூர் தொகுதி கல்வி வளக் குழு உறுப்பினருமான திரு. எம். எஸ். தருமலிங்கம். கூட்டுறவு அபிவிருத்தி மாவட்ட உத்தியோகத்தர் பதவியிலிருந்து மட்டக்களப்பு எண் பார்வை பகுதி கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளராகப் பதவி உயர்வு பெற்றுச் சென்றுள்ளார். கூட்டுறவுச் சங்க நடவடிக்கைகளில் தீவிரமாக ஈடுபட்டு உழைக்கும் இவர் சமூக சேவைகளிலும் முன் நிற்பவர்.




உன்னத தரத்தின் உயர் சுவை-
உலகெங்கும்!

சுவிட்சர்லாந்து முதல் ஹொங்கொங் வரை, இத்தாலி முதல் மேற்கு இந்தியத் தீவுகள் வரை, உலகெங்குமுள்ள மக்களின் அபிமானம் பெற்றது இனிப்பூட்டிய மில்க்மெயிட் கட்டிப் பால்

மில்க்மெயிட் அதி சுத்தமானது, அதி மிருதுவானது, அதி சுவை மிக்கது-ஏனெனில் அது உடன் கறந்த பசுவின் பாலில் உங்களுக்கென்றே தயாரித்தது. அத்துடன் அது கெட்டித்த செறிவு மிகுந்து விளங்கக் காரணம், சர்வ தேச உயர் தராதர விதிகளுக்கமைய நெஸ்லே நிறுவனம் அதைத் தயாரிப்பது தான்

மில்க்மெயிட் சிக்கனமும் மிக்கது. ஏனெனில் அது முன்னரே இனிப்பூட்டியது. எனவே, கோப்பைக் கணக்கில் அதி மதுரமான தேநீர், கோப்பிப் பானங்களை நீங்களே வழங்கினாலும் உங்கள் செலவு கை மிஞ்சிப் போகாது.

மில்க்மெயிட் பாவியுங்கள் உலகெங்கும் அது மிக விரும்பப்படும் காரணத்தைக் கண்டறியுங்கள்




விலை ரூ. 11/90-397 கிராம்

மில்க்மெயிட் அற்புதமான இலங்கைத் தேயிலையை மேலும் அதி சுவை பெறச் செய்யும்.

HTL CN 1103

''சர்வஜனவாக்கெடுப்பின் பின் ஏற்படும்

# சர்வாதிகார ஆட்சியில் முதலில் சிறுபான்மையினரே பாதிக்கப்படுவர்

## திருநெல்வேலி கூட்டத்தில் 'சிவ'

[கோண்டாவில்]

ஜேர்மனியில் ஹிட்லர் ஆட்சியில் மூன்றுமுறை சர்வஜன வாக்கெடுப்பு நடத்தப்பட்ட பின்னரே சர்வாதிகாரத்திற்கு வழிவகுக்கப்பட்டது. இத்தகைய நிலைமை ஏற்பட்ட நாடுகளிலெல்லாம் முதலில் துன்புறுத்தப்பட்டு தாக்கப்பட்டவர்கள் சிறுபான்மை இனத்தவர்களேயாகும். ஜேர்மனியில்கூட அங்கிருந்த சிறுபான்மையினரான யூதர்களே பாதிக்கப்பட்டனர்''

திருநெல்வேலி சந்திக்கருகில் சர்வஜன வாக்கெடுப்புக்கு எதிராக நடைபெற்ற கூட்டத்தில் கூட்டணித்தலைவர் திரு. எம். சிவசிதம்பரம் மேற்கண்டவாறு கூறினார்.

திரு. வி. இராசா தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் அவர் மேலும் பேசியதாவது:

''ஆளும் கட்சியினர் இருபத்தேழு லட்சம் வாக்குகள் பெற்றால் மீண்டும் ஆறு ஆண்டுகள் ஆட்சியை நீடிக்க முடியும் என்றும்' அவர்களினால் இவ்வாக்குகளைப் பெறமுடியும் என்ற கருத்து நிலவுகிறது. ஆனால் உண்மையான நிலை அப்படியில்லை. பதிவுசெய்யப்பட்டுள்ள மொத்தவாக்காளர்களில் இருபத்தேழு லட்சத்திற்கு குறையாமல் வாக்கைப் பெறுவதுடன் அளிக்கப்படுகின்ற வாக்குகளில் அரை வாக்குமேல் பெறப்படவேண்டும். ஐம்பது லட்சம் வாக்குகள் அளிக்கப்பட்டு இருபத்தைந்து லட்சம் பெற்றால் வெற்றி இல்லை. இதிலும் இருபத்தேழு லட்சம் வாக்குகள் பெறவேண்டும். இதே போன்று அறுபது லட்சம் வாக்களித்தால் முப்பது லட்சம் வாக்குகள் பெறப்பட வேண்டும். ஆகையினால் எவ்வளவு தூரம்கூட மக்கள் வாக்களிக்கின்றார்களோ அவ்வளவு தூரம் அவர்கள் வெல்வதற்கான வாக்குகளும் அதிகரிக்கும். ஆகையினால் தமிழ்மக்கள் எல்லோரும் ஒற்றுமையாக சென்று வாக்குகளை இட்டு ஆளும் கட்சியினரின் வெற்றியை இல்லாது செய்யவேண்டும்' இதுவடக்கு கிழக்கில் வாழ்கின்ற எல்லாத் தமிழ் மக்களினதும் கடமையாகும்.

''ஜனாதிபதித்தேர்தல் நடைபெறமுன் நடைபெற்ற அனுராதபுரக் கூட்டமொன்றில் ஜே ஆர் குறிப்பிட்டார் நான் ஜனாதிபதியாக வந்தால் பதினைந்து வருடகாலத்திற்கு தேர்தல் இடாப்புகளை சுருட்டி வைத்துவிடுவேன் என்று கூறினார். இக்கூற்று மக்களிடையே கொந்தளிப்பை ஏற்படுத்தி பாதகமான நிலைஏற்படப் போவதைக்கண்டு தேர்தல் தேவை இல்லை என்றும் கூறவில்லை நான் தேர்தலை நடத்துவேன் என்றார்.

''வெளிநாட்டு பத்திரிகை நிருபர்கள் ஜனாதிபதியாகிய பின் ஜே. ஆரிடம் தேர்தல் நடத்தப்படுமா? என்றுகேட்ட பொழுதும் நான் தேர்தலை நடாத்துவேன் என்று கூறிவிட்டு மீண்டும் ஒருவாரகாலத்தினுள் பாராளுமன்றத்தை ஆறுவருடம் நீடிக்க சர்வசன வாக்கெடுப்பு நடாத்தப்போவதாக அறிவித்தார்.

நாம் சர்வசன வாக்கெடுப்பை எதிர்க்கக் காரணம் ஜனநாயகம் குழிதோண்டிப் புதைக்கப் படப்போவதையிட்டும் தமிழ் மக்களை இது வன்மையாகப் பாதிக்கும் என்பதினாலேயுமே.

''உலகில் பல்வேறுவகையான ஆட்சிகள் காணப்படுகின்றன. ஆனால் பாராளுமன்ற ஆட்சி காணப்படுகின்ற நாடுகளில் எல்லாம் குறிப்பிட்ட காலம் முடிவடைந்ததும் பாராளுமன்றம் நீடிக்கப் படவில்லை. அப்படி இருந்தாலும்கூட மக்கள்முன் மீண்டும் வந்து கணக்குக்காட்டியே பாராளுமன்றத்திற்கு சென்றுள்ளார்கள்? சர்வசனவாக்குரிமையை உலகநாடுகள் பயன்படுத்தியுள்ளன. முக்கியமான தீர்மானங்களை எடுப்பதற்கே இவ்வமைப்பு அவுஸ்ரேலியா, பிரான்ஸ், யப்பானில் இருந்தும் கூட பாராளுமன்றத்தை நீடிப்பதற்கு இது எச்சந்தர்ப்பத்திலும் பயன்படுத்தவில்லை

''1931ல் இருந்து 1977ம் ஆண்டு வரைக்கும் தொகுதிக்கு ஒருவர் என்ற நிலையில் பிரதிநிதிகள் தெரிவுநடைபெற்றது ஆனால் 1977ம் ஆண்டின் பின்னர் மாவட்ட அடிப்படையில் தெரிவுசெய்கின்ற முறை உருவாக்கப்பட்டது

''1956ம் ஆண்டுத் தேர்தலில் சுமார் 40 வீதமானவாக்குகளைப்பெற்று ஐக்கியதேசியக்கட்சி 8 பிரதிநிதிகளையே கொண்டிருந்தனர் என்றும் 1977ம் ஆண்டுத் தேர்தலில் சிறிலங்கா சுதந்திரக்கட்சி 30 வீதமான வாக்குகளைப்பெற்று ஏழு பிரதிநிதிகளையே பெறக்கூடியதாக இருந்தது என்றும் இது நியாயம் இல்லையென்று கூறிய ஆட்சியாளர் விகிதாசார தேர்தல் கொண்டுவந்தனர். இவ்வடிப்படையில் ஜனாதிபதி தேர்தல் வாக்கைப் பார்க்கின்றபோது 53 வீதமான வாக்குகளே ஐக்கியதேசியக் கட்சிக்கும் 30 வீதமான வாக்குகள் சிறிலங்கா சுதந்திரக் கட்சியினருக்கும் கிடைத்துள்ளது. இதனடிப்படையில் தேர்தல் நடைபெற்றால் ஐக்கியதேசியக்கட்சியினர் 100 பிரதிநிதிகளுக்குமேல் பெற முடியாது.

யாழ். எம்.பி. திரு. வெ. யோகேஸ்வரன் கூறியதாவது: ''இந்தோனேஷியாவில் இன்றைய ஜனாதிபதி கூறுவதைப் போன்று ஜனாதிபதியே பாராளுமன்ற உறுப்பினர்களைத் தெரிவு செய்கின்றார் நான் உபசபாநாயகருடன் இந்தோனேஷியாவுக்கு விஜயம்செய்து வாளித்தீவுக்குச் சென்றேன் அப்பகுதிப் பிரதிநிதியும் வந்தார். நான் விமானநிலையப் பெண்ணிடம் உங்கள்பாராளுமன்றப் பிரதிநிதி யார் என்று கேட்டபோது அப்பெண் எமது பகுதி பாராளுமன்றப் பிரதிநிதி யார் என்று தெரியாதெனக் கூறினார். ஜனாதிபதி உறுப்பினரைத் தெரிவு செய்தால் இந்த நிலைதான் ஏற்படும்.''

கோப்பாய் எம். பி. திரு எம். ஆலாலசுந்தரம், யாழ் மாவட்டசபை உபதலைவர் திரு. சி. நாகராசா ஆகியோரும் பேசினார்கள். (ஈ)

ஹரன் (யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
எங்கம்மா சபதம்

வெஸ்லி (மானிப்பாய்)
தினசரி 6-30, 9-30
சனி. ஞாயிறு 2-30
கார்த்திக் — ராதா
அலைகள் ஓய்வதில்லை
(கலர்)

6-வது ஜனத்திரள்வாரம்
றீகல் (யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
ரவிச்சந்திரன்–ஜெயலலிதா
அசோகன்–நாகேஷ்
நான் (ஈஸ்ட்மன் கலர்)

மனோகரா யாழ். நகர்
தினசரி 4 காட்சிகள்
முத்துராமன்–ஸ்ரீவித்யா
காலங்களில் அவள் வசந்தம்

சாந்தி (யாழ். நகர்)
19—21 மட்டும்
சிவாஜி–சரோஜாதேவி
தினசரி 4 காட்சிகள்
ஆலயமணி
— புதிய பிரதி —

ராஜா யாழ். நகர்
தினசரி 4 காட்சிகள்
பாக்கியராஜ் – சரிதா
மௌனகீதங்கள்
(ஈஸ்ட்மன் கலர்)

வின்ஸர் தினசரி 5 காட்சிகள் (யாழ்ப்பாணம்)
BUD SPENCER IN
They Called Him Bull Dozer
AN ENJOYABLE COMMEDY
ABOUT A GAME OF FOOT BALL
முழுநீள ஹாஸ்யப்படம்

வெலிங்டன் (யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
ரஜீவ் – ஜோதி
ரயில் பயணங்களில்
(கலர்)

லிடோ (யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி–ஜெயலலிதா
சவாலே சமாளி

ராணி தினசரி 10-30, 2-30, 6-00, 9-30
(யாழ். நகர்) சிவாஜி-உஷா நந்தினி நடித்த
என்னைப்போல் ஒருவன்

ஸ்ரீதர் தினசரி 10-30, 2-00, 4-30, 7-00, 9-30
(யாழ். நகர்)
BRUCE LEE in
THE WAY OF THE DRAGON
த வே ஒவ் த ட்றகன்
Your last chance to see a Karate film......
Your last chance to see a Bruce Lee's film......
கராட்டி படத்தைப் பார்க்கக் கிடைத்திருக்கும் கடைசிச் சந்தர்ப்பம் இதுவே.........
புரூஸ்லீயின் தீரச் செயல்களை காணக் கிடைக்கும் கடைசிச் சந்தர்ப்பம் இதுவே......

# இனரீதியான பிரச்னைகளுக்கு இடமளியோம்!

## -- பிரதமர் பிரேமா

(கொழும்பு)

''நாம் ஒருபோதும் தமிழ் ஈழம் அமைக்க அனுமதிக்க மாட்டோம். அத்துடன் இன ரீதியான பிரச்னைகளுக்கும் இடமளிக்க மாட்டோம்'' என்று பிரதமர் ஆர். பிரேமதாசா தெரிவித்தார்,

கிரான்ட்பாஸிலுள்ளகொஸ்கஸ்ஹன்டிய என்னும் இடத்தில் நடைபெற்ற சர்வஜன வாக்கெடுப்பு பிரசாரக்கூட்டமொன்றிலேயே பிரதமர் மேற்கண்டவாறு கூறினார். அவர் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:-

''நாம் சிங்களவர், தமிழர், முஸ்லிம், பறங்கியர் என்று பிறக்கவில்லை. மனிதர்களென்றே பிறந்துள்ளோம். நாம் எந்தஒரு இனத்துக்கும் எதுவித துன்பத்தையும் இழைக்கக்கூடாது. ஏனெனில் மறுபிறப்பில் நாம் வேறு விலங்கினங்களில் பிறப்போம்.

''விளக்குச் சின்னத்துக்கு வாக்களிப்பதன் மூலம் திரு. அமிர்தலிங்கத்தையே தொடர்ந்தும் எதிர்க்கட்சித் தலைவராக இருக்க அனுமதிப்பீர்களென்று சிங்கள மக்கள் மத்தியில் திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா பேசியுள்ளதாக என்காதுக்கு எட்டியுள்ளது.

''திருமதி பண்டாரநாயக்காவும் அவரது ஸ்ரீ ல. சு. கட்சியினரும் திரு அமிர்தலிங்கத்துக்கு எதிரானவர்களா? இக்கருத்தினை தமிழ் மக்கள் மத்தியில் திருமதி பண்டாரநாயக்கா என்பதுபற்றி நாம் அறிய வேண்டும்.

'தமிழ்ஈழம்' அமைக்க அனுமதிக்கமாட்டேன் என்று திருமதி பண்டாரநாயக்கா வடக்கில் பேசட்டுப்பார்க்கலாமென்று நான் சவால் விடுகின்றேன்.

தமிழ் பேசும் மக்கள் மத்தியில் தமிழ் ஈழத்தை அமைக்க ஒருபோதும் அனுமதியோம். ஆனால் நாட்டு மக்கள் அனைவருக்கும் சுபீட்சத்தை வழங்குவோம் என்று தெளிவாக நான் கூறியுள்ளேன்'' என்றார்.

[கி]

# ''பாரதியார் கவிதைகள் மக்களுக்கு வழிகாட்டி''

(மாவிட்டபுரம்)

''பாரதியாரின் கவிதைகள் காலத்தால் மங்காத தத்துவங்களைக் கொண்டவை இன்றைய உலகுக்கு மட்டுமல்ல வருங்காலத்திலும் கூட இக்கவிதைகள் மக்களுக்கு வழிகாட்டியாக விளங்கக் கூடியன வென்றால் அது மிகையாகாது. ஆகவே வருங்கால சந்ததியினரான மாணவர்களும் கூட பாரதியைப் பற்றியும், பாரதி கவிதைகளைப் பற்றியும் நன்கறிந்து கொள்ள வேண்டும்''

இவ்வாறு காங்கேசன்துறை நடேஸ்வராக் கல்லூரிஉயர்தர மாணவர் மன்றம் நடத்திய பாரதி நூற்றாண்டு விழாவில் பிரதம அதிதியாகக் கலந்து உரையாற்றிய யாழ்ப்பாண பிரதேச ஆங்கில வட்டாரக் கல்வியதிகாரி திரு இ. க. குலசேகரன் கூறினார்.

கல்லூரி மண்டபத்தில் நடந்த இவ்விழாவுக்கு மாணவர் மன்ற தலைவர் செல்வன் க. கருணாநிதி தலைமை வகித்தார். திரு குலசேகரன் மேலும் கூறியதாவது:

''ஒருவரின் ஆற்றலையும் அவரது படைப்புக்களின் சிறப்பையும் காலத்தால்மட்டுமே மதிப்பீடு செய்யலாம். பாரதியார் மறைந்து கால் நூற்றாண்டுகளுக்கு மேலாகின்ற போதும் அன்னாருக்கு நாம் விழாவெடுக்கிறோம். இன்றுமட்டுமல்ல இன்னும் பல நூற்றாண்டுகள் சென்றாலும் தமிழ் இலக்கிய வானில் பாரதியார் பிரகாசம் மிக்க நட்சத்திரமாக, சமூகசீர்திருத்தவாதியாக, விடுதலை வீரராக, தமிழ் அபிமானியாக பிரகாசிப்பார் என்பதில் ஐயமில்லை. விடுதலை வேட்கை, அநீதியை எதிர்த்தல், சாதி பேதத்தை சாடுதல், தமிழ்ஆர்வம் போன்றவை அவரது கவிதையின் சில பிரதிபிம்பங்களாகும்'' என்றார்

கல்லூரி அதிபர் திரு. து. பாலசிங்கம், காங்கேசன்துறை மகாவித்தியாலய அதிபர் திரு. சி. வேலாயுதம், சிலோன் விஜயேந்திரன் திரு. ஏ ரி. பொன்னுத்துரை, திருமதி வள்ளி நாயகி இராமலிங்கம் ஆகியோரும் கருத்துரை வழங்கினர்.

சாக்கு விற்பனை

முத்துஐயன்கட்டு ப. நோ. கூ. சங்கத்தில் 2500 வெற்றுச் சாக்குகள் கேள்விப்பத்திர மூலம் விற்பனை செய்யப்படவுள்ளது. சாக்குகளைப் பெற விரும்புவோர் மீளளிக்கப்படும் வைப்புப் பணமாக ரூபா 250/- செலுத்துவதுடன், மீளளிக்கப்படாத கேள்விப் பத்திரப் பணமாக ரூபா 10/- செலுத்தி சங்கத்தால் வழங்கப்படும் விண்ணப்பப் பத்திரத்தில் விண்ணப்பிக்க வேண்டும். சீல் இடப்பட்ட கடித உறையில் இடது பக்க மூலையில் வெற்றுச்சாக்குகளுக்கான கேள்விப் பத்திரம் எனக் குறிப்பிட்டு தலைவர், முத்துஐயன்கட்டு ப. நோ. கூ. சங்கம் ஒட்டுசுட்டான், என்ற முகவரிக்கு 28-12-82 திகதி மு. ப. 12-00 மணிக்கு முன்பதாக கிடைக்கக்கூடியதாக அனுப்பிவைத்தல் வேண்டும். சாக்குகளைப் பார்வையிட விரும்புவோர் சங்க அலுவலக நேரத்தில் பார்வையிடலாம்.

ஆ. மகேச்சுரன்
பொது முகாமையாளர்.
5547

வியாபாரம் பெருக
விளம்பரம் செய்க

# "பயங்கரவாத தடைச்சட்டம்

# இன்று தென்பகுதியிலும் அமுல்"

## சுதந்திரக்கட்சி அமைப்பாளர் சிறைவைக்கப்பட்டுள்ளனர்

### பருத்தித்துறையில் சிறிமா

[புலோலி நிருபர்]

"சர்வஜன வாக்கெடுப்பில் ஜே.ஆர்.ஜெயவர்த்தன வென்ருல் இலங்கையில் சர்வாதிகார ஆட்சியே நடைபெறும். இச்சர்வாதிகார ஆட்சியை நீக்க மக்கள் தமது வாக்குப் பலத்தைச் சரியாகப் பிரயோகிக்க வேண்டும். பொதுத் தேர்தலின்மூலம் தான்வெற்றி பெற முடியாதென அறிந்து கொண்டபடியினுலேயே ஜே. ஆர். பொதுத்தேர்தலை நடத்தத் தயங்குகிருர்."

இவ்வாறு பருத்தித்துறை கடற்கரை மைதானத்தில் சர்வஜன வாக்கெடுப்பிற்கெதிராக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக் கூட்டத்தில் உரையாற்றிய திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா கூறினர்.

சட்டத்தரணி எஸ். ஜெயசிங்கம் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் தொடர்ந்து உரையாற்றிய ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா குறிப்பிட்டதாவது:

"பொதுத் தேர்தல் ஒன்றை நடத்துவதைத் தடைசெய்வதற்காக நடைபெறும் இச்சர்வசன வாக்கெடுப்பு இலங்கையின் சரித்திரத்திலேயே முதன் முறையாக நடைபெறுகின்றது. பொதுத்தேர்தலை நடத்துவதைத் தடைசெய்து உலகில் எங்காவது இப்படிச் சர்வசன வாக்கெடுப்பு நடைபெறவில்லை.

'மக்கள் தங்களுக்குள்ள வாக்குரிமையைப் பயன்படுத்தி தங்களின் பிரதிநிதிகளைத் தெரிவுசெய்யவேண்டும் சர்வசன வாக்கெடுப்பின் பின் ஜே. ஆர். ஜெயவர்த்தன விரும்பியவர்களே பாராளுமன்ற உறுப்பினர்களாகத் தெரிவுசெய்யப்படுவார்கள்.

#### பயங்கரவாதத் தடைச் சட்டம்

"வடபகுதியில் பயங்கரவாதத்தைத் தடை செய்வதற்காகவே பயங்கரவாத தடைச் சட்டத்தைக்கொண்டுவந்தார். அச்சட்டத்தை வைத்துக் கொண்டு இன்று தென் இலங்கை மக்களையும் அடக்குகின்றனர். அவசரகாலச் சட்டத்தின் கீழ் வடபகுதியில் மட்டுமன்றி தென்பகுதி மக்களையும் அடக்கி ஒடுக்கிக் கொடுமைப் படுத்துகின்றனர்.

"ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் அமைப்பாளர்கள், ஆதரவாளர்கள் பலர் சிறைவைக்கப் பட்டுள்ளனர். அவர்களுக்கு எதிராக எதுவித குற்றப் பத்திரிகைகளும் தாக்கல் செய்யப் படவில்லை. இத்தகையகொடூரமான அடக்குமுறைகள், சட்டங்களுக்கு முகங்கொடுத்துத்தான் நாங்கள் பொதுசன அபிப்பிராயத் தேர்தலில் செயற்பட்டுவருகின்ரேம். தென் இலங்கையில் சிறப்பாக அத்தனகலையில் இன்று பெரும் பயங்கர நிலை உள்ளது.

#### மாவட்ட சபைத் தேர்தலின்போது

யாழ். பிரதேசத்தில் வாழ்கின்ற உங்களுக்கு எதிராகச் சட்டங்கள் எவ்வாறு நடைமுறைப்படுத்தப்படுகின்றன என்பதை நான் நன்குணர்ந்துள்ளேன். கடந்த மாவட்ட அபிவிருத்திசபைத் தேர்தலின் போது உங்கள் நூல் நிலையம் தீக்கிரையானது. பல வன்செயல்கள் நடைபெற்றன. மக்களை வாக்களிக்கச் செல்லவிடாது தடுத்தனர். இப்படி நடந்தும் ஐக்கிய தேசியக்கட்சி ஒரு ஆசனத்தையாவது யாழ். மாவட்டத்தில் பெறவில்லை. அத்தேர்தலின்போது யாழ். மாவட்டத்தில் வன்செயல்கள் நிகழ்ந்தபோதும் 80 வீதமான வாக்காளர்கள் வாக்களித்திருந்தனர்" என்ருர்.

## ரூ. 2 லட்சம்---

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கலெக்டர் எஸ்.எம்.ஜே சேனரத்னவிடம் ஒப்படைத்தனர்.

பொருட்களையும் வானையும் பறிமுதல் செய்யும்படி உத்தரவிட்ட சுங்க இலாகா கலெக்டர் சாரதிக்கு பத்தாயிரம் ரூபா அபராதம் விதித்தார். (மா)

## விசாரணை..

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கள், குழந்தைகளைத் தாக்கியதுடன் ஆலயத்துக்குள்ளும் பிரவேசித்து, புனிதத் தன்மைக்கும் மாசு கற்பிக்கும் முறையில்நடந்துள்ளனர் ஜனநாயகரீதியில் மக்கள் தங்களது கருத்தையும், எதிர்ப்பையும் சுதந்திரமான முறையில் தெரிவித்தபோது, மிருகத்தனமான முறையில் பொலிஸார் நடந்து கொண்ட விதம் மிகவும் கவலையையும், அதிருப்தியையும் அளிக்கிறது. இது குறித்துத் தாமதமின்றி தீவிர விசாரணை நடத்துமாறு கோருகின்றேன்."

இத்தந்தியின் பிரதிகள் எதிர்க்கட்சி முதல்வர், எம். பிக்கள், கத்தோலிக்கஅமைச்சர்கள், ஆயர் குழுத் தலைவர், பொலிஸ் மா அதிபர் ஆகியோருக்கும் அனுப்பப்பட்டுள்ளன.

## பொதுச்சபை---

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தலில் அரசாங்கத்திற்கெதிராக வாக்களிக்கவேண்டும். என்று கேட்டுக்கொண்டார்.

"எமக்குள் ஆயிரம் பிரச்னைகள் இருந்தாலும் அவற்றை எல்லாம் மறந்துவிட்டபொதுசனவாக்கெடுப்பின்போது தலைமைப்பீடத்தின்முடிவை ஏற்று செயல்படவேண்டும்" என்று அவர் வலியுறுத்தினர்.

"துண்டுப்பிரசுரங்களை உறுப்பினர்களாகிய நீங்கள் ஒவ்வொருவீட்டுக்குப் விநியோகித்துப் பிரசாரம்செய்யவேண்டும்" என்று அவர் கேட்டபொழுது, சில உறுப்பினர்கள் எழுந்து "கூட்டணியினர் கிளிநொச்சித் தொகுதிக்குக் கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்ற வில்லை என்றும் யாழ். மாவட்ட அபிவிருத்தி சபைத் தேர்தலின்போது அமோக வாக்குகளை கிளிநொச்சித் தொகுதி மட்டுமே அளித்திருந்தும் இதுவரை இத் தொகுதிஉறுப்பினராகஎவரும் மாவட்ட அபிவிருத்திசபையில் நியமிக்கப்படவில்லை என்றும் கூறி வெளிநடப்புச்செய்தனர்.

ஆனாலும் திரு. ஆனந்தசங்கரி உறுதி அளித்து வெளிநடப்புசெய்தவர்களை சமாதானப்படுத்தி திரும்பவும்கூட்டத்துக்கு அழைத்துவந்திருந்தார்.

## ஜே. ஆர். ...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மகாநாட்டில் ஜனதிபதி, பிரதமர், அமைச்சர்கள், பாராளுமன்றஉறுப்பினர்கள்,மாவட்டசபைஉறுப்பினர்கள் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். [வெ]

# "அநீதிகள் மேலும் உக்கிரமடைய தமிழ்மக்கள் இடமளிக்கக்கூடாது"

### தெல்லிப்பழையில் அமிர்

(மாவிட்டபுரம்)

"பாராளுமன்ற நீடிப்புக்கு ஆதரவாக நாம் வாக்களித்தால் ஓர் வரையறையற்ற சர்வாதிகார ஆட்சிக்கே வழி வகுத்தவர்களாகிவிடுவோம். இப்பொழுது எமக்கு இழைக்கப்படும் அநீதிகள் மேலும் உக்கிரமடையும். இதற்கு தமிழ் மக்கள் ஒருபோதும் இடமளிக்கக்கூடாது."

இவ்வாறு தெல்லிப்பழை தமிழர் விடுதலைக் கூட்டணி பணிமனைக்கருகாமையில் இடம்பெற்ற மக்கள் தீர்ப்பு பிரசாரக்கூட்டத்தில் எதிர்க்கட்சிமுதல்வர் திரு. அ. அமிர்தலிங்கம் கூறினர் அவர் மேலும் கூறியதாவது:

"நிறைவேற்று அதிகாரமுள்ள ஜனதிபதி சர்வாதிகாரியாக மாறுவதைத் தடுக்க அமெரிக்கா, பிரான்ஸ்போன்ற நாடுகளில் பிரதிநிதிகள் சபைக்கு அதிகாரங்கள் உண்டு. அண்மையில்கூட அமெரிக்க ஜனதிபதி நீகன் அணுக்குண்டு தொடர்பாக முன்வைத்த திட்டத்தை பிரதிநிதிகள்சபை நிராகரித்தது. ஆனல் நமது நாட்டிலோ வெறும் பொம்மைப் பாராளுமன்றத்தை, ஜனதிபதி கூறுவதற்கு 'ஆமா' போடும் நிலையில் உருவாக்க மக்கள் தீர்ப்பு வாக்கெடுப்பு வழிவகுக்கப்போகின்றது.

"ஜனதிபதி தேர்தலின்பின்னர் மதகுருமார், விரிவுரையாளர்கள், இளைஞர்கள் போன்ருேர் கைதுசெய்யப் பட்டுள்ளதுடன் அவர்கள் சித்திரவதைசெய்துஒப்புதல் வாக்குமூலம் பெற முயற்சி நடக்கிறது நிலைமை மோசமாகிவருவதையே இது எடுத்துக்காட்டுகிறது.

"நாம் ஒரு விடுதலை இயக்கமாக செயல்படுகிறேம். அதற்கு எமது உட்பலத்தை அதிகரிப்பது அவசியமாகும். உள்நாட்டில் எமது எல்லைகளை வரையறுத்து எமது பிரதேசங்களைப் பேணி ஓர் ஸ்திரமான நிலைமை ஏற்படுத்துவது அவசியமாகும்.

1972ல் எமது பிரச்னையைப் பற்றி அக்கறை கொள்ளாதிருந்தவர்கள் இன்று பெரிதும் அக்கறை கொண்டுள்ளனர். தொடர்ந்தும் எமது விடுதலைப் பயணத்தைத் தொடர மக்கள் ஆதரவு நல்க வேண்டும். பேச்சுவார்த்தைமூலமும் எதிர்த்து போராடுவதன் மூலமும் நேசநாடுகளின் ஆதரவை திரட்டுவதன்மூலமும் நாம் விடுதலைப் பாதையில் முன்னேறி வருகிறேம் என்ருர்.

மானிப்பாய் எம்.பி திரு. வி. தர்மலிங்கம், மாவை சேனதிராஜா, திரு ந.இராசேந்திரன் உட்பட பலர் பேசினர்.

## பல்வேறு..

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

உலகத்தை தொழிலாளர்கள் முன்வைக்கிருர்கள்"

"வேறு எந்தநாட்டிலும் காணப்படாத அளவுக்கு ஏராளமான தேசிய இனங்களைக்கொண்ட நாட்டில், தேசிய இன நலன்களை முழுமையாகப் பூர்த்திசெய்வதும், அந்த வகையில் மோதல்களுக்கான சாத்தியக்கூறுகளை அகற்றக்கூடிய நிலைமையை உண்டாக்குவதும்தான் தேசிய நலன்கள் குறித்த பிரச்னைக்கு சரியான ஒரே பரிகார மார்க்கமாகும் என்பதை உறுதியாகத் தெரிந்துகொள்ளுகிருேம்,"

## முன்னுள்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இராணுவ முகாமிலும் இவர் தடுத்து வைக்கப்பட்டிருந்தார்.

இவர் உகந்தை முதல் மட்டக்களப்பு மாவட்ட எல்லையான வெருகலம்பதி வரை பாதையாத்திரை ஒன்றையும் மேற்கொண்டு தமிழர் விடுதலைக்கூட்டணிக் கொள்கையைப் பரப்பினுர்.


க. பொ. த.
உயர் பரீட்சையில்
4 பாடங்களில்
சித்தியடைந்துவிட்டீர்களா

நீங்களும்
சட்டத்தரணியாகலாம்!

யாழ். நகரில் முன்னணி சட்ட விரிவுரையாளர்களால் ஒன்றிணைந்து நடாத்தப்படும் சட்ட விரிவுரைகள்; சனி, ஞாயிறு தினங்களில் நடைபெறும். ரூபா 5/-க்கான காசுக்கட்டளை அனுப்பி விபரங்களையும், விண்ணப்பப் படிவத்தையும் பெற்றுக்கொள்ளவும்.

பட்டப்படிப்புக்கள் கல்லூரி
173/9, ஸ்ரான்லி வீதி
(வெலிங்டன் கலரி கேற் முன்பாக)
யாழ்ப்பாணம்.



பட்டப் படிப்புகள் கல்லூரி

புதிய மாணவர்களை

அனுமதித்தல் 1983 / 84

கலை, விஞ்ஞானம், சட்டம், வர்த்தகம் ஆகிய பல்கலைக்கழகப் பாட நெறிகளுக்கான விரிவுரைகளுக்கு, க. பொ த உயர் பரீட்சையில் 3 பாடங்களில் சித்தி பெற்றவர்களும் பயிற்றப்பட்ட ஆசிரியர்களும் பதிவு செய்து கொள்ளலாம். விண்ணப்பப்படிவமும், பதிவு செய்வதற்கான கையேடும் ரூபா 5/- க்கான காசுக்கட்டளையுடன் சுயமுகவரி எழுதப்பட்டதும், முத்திரை ஒட்டப்பட்டதுமான நீளத்தபாலுறையை அனுப்பிப் பெற்றுக் கொள்ளலாம். விண்ணப்பபடிவம் நேரில் விநியோகிக்கப்படமாட்டாது. முடிவு திகதி 14 - 1 - 1983.

உதவிப் பதிவாளர்
பட்டப்படிப்புகள் கல்லூரி

தபால்பெட்டி இல: 110
173/9, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.



ஹோம் பினன்ஸ் லிமிட்

யாழ். புடவை வியாபாரிகளுக்கு ஓர் வரப்பிரசாதம்

ஹோம் பினன்ஸ் லிமிட், 82, கன்னதிட்டி வீதியிலுள்ள ஹோம் பினன்ஸ் ஸ்தாபனத்தில் பூகொடை ஆலை புடவை வகைகள் மொத்த விற்பனைக்கு உண்டு.

I. சாயமூட்டிய பொப்பிளின்
II. வெள்ளை பொப்பிளின்
III. பிறின்ரெட் பப்றிக்

விபரங்களுக்கு தொடர்புகொள்ளவேண்டிய முகவரி:

ஹோம் பினன்ஸ் லிமிட்
82, கன்னதிட்டி வீதி,
யாழ்ப்பாணம். (போன்: 24310)

தலைமைக் காரியாலயம்
ஹோம் பினன்ஸ் லிமிட்
463, காலி வீதி, கொழும்பு-3



நத்தார் - புத்தாண்டை - முன்னிட்டு
விசேட கழிவு! விரையுங்கள்!!
சகல மரத்தளபாடங்கள் - "ஆர்பிக்கோ" மெத்தைகள் -
குஷன் - செற்றிகள். இன்னும் பல.

டில்கா பேணிச்சர் பலெஸ்
234 - 236, கே. கே. எஸ். வீதி யாழ்ப்பாணம்.
போன்: 24186


இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 68-ம் இலக்க அச்சகத்தில் 1982-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 20-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka, under number Q.B. 100236/81 Eelanaadu - P. O. Box: 49. Telegram: Eelanaadu, Telephone: 22389 — 24126.